Registered as a NewsPaper

விலை ரூபா-4.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12

நாதம் -15 திருவள்ளுவர் ஆண்டு- 2036 மாசி-5 17-02-2005 வியாழக்கிழமை ஓசை -365



உங்கள் அனைத்துத் தேவைகளுக்கும்

R.V.பந்தல் சேவை

முல்லைச்சாலை, தருமபுரம். T.P:0712-610008 (சி-11253) விநாயகர் வீதி, மயிலிட்டி.

- கடல் கோளினால் பாதிக்கப்பட்ட -

## வடக்கு - கிழக்கு மக்கள் நிவாரணப் பணியில் புறக்கணிப்பு

- சு.ப தமிழ்ச்செல்வன் குற்றச்சாட்டு

(திருகோணமலை)

"கடற்கோள் அனர்த்த நிவாரணப் பணிகள் தெற்கிலேதான் முன்னெடுத்துச் செல்லப்படுகின்றன. எமது தாயகமான வடக்கு கிழக்கு மாகாணம் கடற்கோள் நிவாரண, புனரமைப்பு, புனர்நிர்மாணப் பணிகளில் புறக்கணிக்கப்பட்டுள்ளன" என்று தமிழ்ச்செல்வன் தெரிவித்தார். நேற்றுத் திருகோணமலை செய்தியாளர்களிடம் அவர் இவ்வாறு கூறினார்.

"கடற்கோள் அனர்த்தத்தால் மோசமாகப் பாதிக்கப்பட்ட மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டக் கரையோரப் பிரதேசங்களில் நிவாரண, புனரமைப்பு நிர்மாணப் பணிகளை முழுமூச்சுடன் முன்னெடுத்து அர்ப்பணிப்புடன் செயற்பட்ட அம்மாவட்டங்களின் அரசியல் துறைப் பொறுப்பாளர் கௌசல்யன் அரச படையினரின் துணையுடன் படுகொலை செய்த சம்பவம் எமது தாயக நிவாரண, புனர்நிர்மாணப் பணிகளை அரசாங்கம் புறக்கணித்து வருவதை தெளிவாகக்

(12ஆம் பக்கம் பார்க்க)



# புலிகளைத் தடைசெய்யுமாறான கோரிக்கை கனடா அரசாங்கத்தால் நிராகரிப்பு!

## நிலமை சீர் கேடடைவதைக் கனடா விரும்பவில்லை

**விடுதலைப் புலிகளை கனடாவில் தடை செய்யப்பட்ட அமைப்பாக அறிவிக்க வேண்டும் என்ற எதிர் கட்சியான கன்சவேட்டிவ் கட்சி உறுப்பினரின் வேண்டுகோளை கனேடிய வெளிவிவகார அமைச்சர் பியர் பெற்றிக்குறு அவர்கள் நிராகரித்துள்ளார்.**

அமெரிக்கா, நோர்வே உட்படப் பல நாடுகள் விடுதலைப்புலிகளுக்கு எதிராக எந்தவித நடவடிக்கைகளையும் கனடாவில் மேற்கொண்டு, நிலைமை சீர் கேடாவதை அனுமதிக்க வேண்டாம் எனத் தம்மைக் கேட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

"விடுதலைப்புலிகளையும் உள்வாங்கி, இயங்குவதன் மூலமே போர்நிறுத்தத்தை மேலும் வலுப்படுத்தி, தொடர்ந்து பேணுவதற்கு உதவும் என நாம் திடமாக நம்புகின்றோம். இந்த நேரத்தில் அவர்களைத் தடை செய்வதன் மூலம் எந்தவித பலனும் ஏற்படப் போவதில்லை என்பதையும் நாம் உண்மையாக உணர்கின்றோம், எனக் கனேடிய வெளிவிவகார அமைச்சர் பியர் பெற்றிக்குறு தனது அமைச்சக உபகுழு குழுநிலை விவாதத்தின்போது எதிர் கட்சி உறுப்பினர் ஒருவரின் கேள்விக்கு பதிலளிக்கும்போது தெரிவித்துள்ளார். 2001 செப்ரெம்பரில் அமெரிக்காவில் நடந்த

(12ஆம் பக்கம் பார்க்க)

## கௌசல்யன் கொலை குறித்து நோர்வே அரசு அதிர்ச்சி

விடுதலைப்புலிகளின் மட்டு-அம்பாறை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் இ.கௌசல்யன் கொலை குறித்து நோர்வே அரசாங்கம் கவலையும், அதிர்ச்சியும் அடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கௌசல்யன் உள்ளிட்ட விடுதலைப்புலிகளின் அரசியல் போராளிகள் மற்றும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சந்திர நேரு அரியநாயகம் ஆகியோரின் கொலையை அடுத்து எழுந்துள்ள பதற்றத்தைத் தணிக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. படை அதிகாரிகளையும் விடுதலைப்புலிகளையும் சந்திக்க வைக்க ஏற்பாடுகளைச் செய்யுமாறு நோர்வே அரசாங்கம் யுத்தக்நிறுத்த கண்காணிப்புக்குழுத் தலைவரைக் கேட்டுள்ளது. நோர்வே அரசின் வேண்டுகோளையடுத்து யாழ்ப்பாணம்,

(12ஆம் பக்கம் பார்க்க)



## கௌசல்யன் உட்பட போராளிகள் கொலையை கண்டித்து யாழ் கல்விச் சமூகம் பேரணி

(அலுவலக செய்தியாளர்)

மட்டு- அம்பாறை அரசியல் துறைப் பொறுப்பாளர் லெப். கேணல் கௌசல்யன் உட்பட நான்கு போராளிகள் மற்றும் மாமனிதர் சந்திரநேரு அரியநாயகம் அவர்களும் படுகொலை செய்யப்பட்டதைக் கண்டித்து நேற்று யாழ். மாவட்டத்தில் கல்விச்சமூகத்தினரால் மாபெரும் ஆர்ப்பட்டப் பேரணி ஒன்று நடத்தப்பட்டது.

மேற்படி கண்டனப் பேரணி நல்லூர் கந்தசுவாமி ஆலய முன்றலில் இருந்து 10.30 மணி அளவில் ஆரம்பமாகி கோவில் வீதியில் அமைந்துள்ள அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின் உயர்ஸ்தானிகர் அலுவலகத்தில் யாழ். அலுவலக வதிடப்பிரதிநிதி றிச்சாட் பாக்கிளிடம் மகஜர் ஒன்று கையளிக்கப்பட்ட பின் ஆர்பாட்டப் பேரணி தொடர்ந்து கோவில் வீதியிலுள்ள போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் யாழ் மாவட்ட அலுவலகத்தை 11.10 மணி அளவில் வந்தடைந்தது அங்கு போர் நிறுத்தக்கண்காணிப்புக் குழு யாழ். மாவட்டப் பொறுப்பாளர், மற்றும் அலுவலகப்பிரதிநிதிகள் ஆகியோரிடம் மகஜர்கள் கையளிக்கப்பட்டன. இவ்வாறு கையளிக்கப்பட்ட மகஜர்கள் "நிழல்யுத்தங்களை நிறுத்த அரசிற்கு அழுத்தம் கொடுப்போம்" ." மட்டு-அம்பாறை அரசியல் துறைப் பொறுப்பாளர் உட்பட நான்கு போராளிகளதும், மாம

(12ஆம் பக்கம் பார்க்க)

## அமைச்சில் பணிபுரியும் ஊழியரை டக்ளஸ்தேவானந்தா தாக்கினார்

விவசாய விற்பனை துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நேற்று அமைச்சில் பணியாற்றும் செயலரின் காரியாலய உதவியாளரைத் தாக்கிய தாகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. இதனையடுத்து இதற்கு எதிராக அமைச்சின் ஊழியர்கள் ஆட்சேபம் ஒன்றை அமைச்சின் செயலாளரிடம் இன்று கையளிக்கவுள்ளனர். இதில் அமைச்சில் பணியாற்றும் நூறுபேரின் கையொப்பங்களைப் பெறுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளன.

அமைச்சில் பணியாற்றும் யு ஜி பந்துல எனப்படும் ஊழியரை அவருக்கே தெரியாத காரணம் கூறப்பட்டு அமைச்சர் தாக்கியதாக இந்த முறைப்பாட்டுக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. இது வரைகாலமும் அமைச்சு ஒன்றின் ஊழியர் அமைச்சராலோ அல்லது அரசியல்வாதி ஒருவராலோ தாக்கப்பட்டதைக் தாம் அறிந்திருக்கவில்லை.

இந்த நிலையில் அமைச்சர் டக்ளஸ தேவானந்தா மேற்கொண்ட நடவடிக்கையானது சனநாயக வரம்புகளை மீறுவது மாத்திரமல்லாமல், மனித உரிமை மீறலுமாகும். சாதாரணமாக அரச ஊழியர் ஒருவர் தவறு செய்வாராக இருந்தால் அதற்கு எதிராக ஒழுங்காற்று நடவடிக்கையை மேற்கொள்வதே நடைமுறையாகும். எனினும் இதனை மறுக்கும் வகையில் அமைச்சர் நடந்து கொண்டமையால் தமக்குப் பயம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ள ஊழியர்கள் இதற்குத் தகுந்த நடவடிக்கை எடுக்கவேண்டுமென அமைச்சின் செயலரிடம் கோரியுள்ளனர்.அல்லது தமக்கு உரிய இடமாற்றங்களை

(12ஆம் பக்கம் பார்க்க)

*-100 மீற்றருக்கு அப்பால் கட்டடங்கள்-*

## திருகோணமலையில் சிங்கள குடியேற்றவாசிகளுக்கு விதி விலக்கு

கடலிலிருந்து 100 மீற்றர்கள் தூரத்திற்கப்பாலேயே புதிய கட்டடங்கள் நிர்மாணிக்கப்படலாம் என்ற அரசின்நிலைப்பாட்டில் திருகோணமலையின் சில பகுதிகளுக்கு விலக்களிக்கப்பட்டுள்ளது. திருகோணமலையில் கோணேசர் ஆலயப்பகுதியிலிருந்து அலஸ் தோட்டம் வரையிலான கடற்கரைப்பகுதி இதிலிருந்து விதி விலக்கு அளிக்கப்பட்டுள்ளதாக அரசாங்கம் வர்த்தமானி அறிவித்தல் மூலம் தெரிவித்துள்ளது.

இப்பகுதியில் ஏற்கனவே உருவாக்கப்பட்டுள்ள சிங்களக்குடியேற்றங்கள் பாதிக்கப்படுமென்பதாலேயே அரசாங்கம் இப்பகுதிக்கு விசேட விலக்களித்துள்ளது என அவதானிகள் கருத்துவெளியிட்டுள்ளனர். இதேவேளை கடலில் இருந்து 100 மீற்றருக்கு அப்பால் கட்டடங்களைஅமைக்கும் அரசாங்கத்தின் உத்தரவுக்கு அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் சில முக்கிய அமைச்சர்கள் மற்றும் எதிர்க்கட்சியும், பல்வேறு அமைப்புகளும் கடும் எதிர்ப்பைவெளிப்படுத்திவரும் நிலையில் அரசாங்கம் தனது நிலைப்பாட்டை நடைமுறைப்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (32)

# இன்று ரூபெல்லா தடுப்பு மருந்தேற்ற ஏற்பாடு

(அலுவலக செய்தியாளர்)

இதுவரை ரூபெல்லா தடுப்பு மருந்து பெறாத 16 இற்கும் 44 வயதுக்கும் இடைப்பட்ட பெண்களுக்கான ரூபெல்லா தடுப்பு மருந்து இன்று கண்டா வளை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் பின்வரும் நிலையங்களில்வழங்கப் படவுள்ளதுடன். இன்று கிளிநொச்சி சுகாதார வைத்தியஅதிகாரி பணிமனையிலும் தடுப்பு மருந்தேற்றுவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்புட்டுள்ளன.

இன்றைய தினத்தில் தருமபுரம், ஆரம்ப சுகாதார நிலையத்திலும், முரசு மோட்டை பொதுநோக்கு மண்டபத்திலும் குமரபுரம் பரந்தன் இந்துக்கல்லூரியிலும் வைத்து மேற்படி தடுப்பு மருந்து வழங்கப் படவுள்ளது. எனவே இந்த சந்தர்ப் பத்தைத் தவறவிடாது ரூபெல்லா என்னும் கொடிய நோய்க்கு எதி ரான தடுப்பு மருந்தை அந்தந்த நிலையங்களில் பெற்றுக் கொள்ளுமாறு கிளிநொச்சி கண்டா வளை சுகாதார வைத்திய அதிகாரிகள் வேண்டியுள்ளனர். (சோ)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும், அந்தியேட்டி அழைப்பும்



அமரர்

**கைலாயபிள்ளை பொன்னுத்துரை**

(நீர்ப்பாசனத் திணைக்களம், ஒட்டுசுட்டான்)

மலர்வு :- 1948.03.26

உதிர்வு :- 2005.01.19

*அரவணைத்துக் காத்திருந்த*
*எமதன்பு அப்பாவே!*
*பாதியிலே எம்மைப்பரிதவிக்க விட்டு*
*பரமனடி சென்றுவிட்டமாயம் என்ன?*

19.01.2005 இல் கொடிய நோய் அரக்கனால் எம்மை விட்டுப்பிரிந்த எமதன்புத் தெய்வத்தின் அந்தியேட்டிக் கிரியை 18.02.2005 வெள்ளிக்கிழமை நடைபெறவிருப்பதால், அத்தருணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் கலந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

கதிரிப்பாய், அச்சுவேலி.

தகவல்:-
*அன்னாரின் பிரிவில் துயருறும் மனைவி, பிள்ளைகள்.*

## வரிவிளம்பரம்

### விற்பனையாகின்றது

வேலுப்பிள்ளை அன்பழகன் ஆசிரியர் அவர்களது தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை மணவர்களுக்கான பரீட்சை மாதிரி வினாத்தாள்கள் (15 நாட்களுக்குள் 1வினாத்தாள்)அத்துடன் கட்டுரைப்பொத்தகம்பரீட்சை வழிகாட்டி 2004ஆம் வருடபுதியவெளியீடு. பாடசாலைகளுக்கு சிறப்பான கழிவு,கிடைக்குமிடம் வன்னியில் எமது விற்பனைமுகவர் பிள்ளையார்பொத்தகசாலை, கிளிநொச்சி. (சி.11415)

### புதிய பாட நூல்கள்

பாலர்வகுப்பு முதல் உயர்தரம் வரையான அனைத்துப்புதிய பாட நூல்களும் வந்துவிட்டன. சகல அறிவமுது பொத்தகசாலையிலும் பெற்றுக்கொள்ளலாம். (5723)

### சான்றிதழ் வழங்கல்

NITM-COMPUTER TRAINING CENTRE- புதுக்குடியிருப்பு- எமது நிறுவனத்தில் பயிற்சியை முடித்துக்கொண்ட ஒருதொகுதி மாணவருக்கான சான்றிதழ் எதிர்வரும்20/02/2005 மாலை3மணி க்கு வழங்கப்படவுள்ளது.Director (5692)

## 51 ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம் :- 1929.07.09

மறைவு :- 2004.12.26

**திருமதி இலட்சுமிப்பிள்ளை-நல்லையா**

*உடுத்துறை வடக்கு, தாளையடி*

கரை தழுவும் கடலோரம்...
அழகு பொங்கும் சிற்றூரில்
சொந்தங்களெல்லாம் கூடி
நின்று
நல்ல சொப்பனங்கள் கண்டபோது
பொறுக்காத கடல் தாயே...
நீ கடும் சீற்றம்
கொண்டதேனோ?
ஆழிப்பேரலை எனும்
அலைமகளாய் நீ வந்து
எம் அன்னையைப்
பறித்ததேனோ....?
51 நாட்களென்ன ஆண்டுகள்
பலவானாலும்
ஆறாது எம் துயரம் நீங்காது
உன் நினைவு.

18.02.2005 வெள்ளிக்கிழமை கீழ் குறிப்பிட்டுள்ள முகவரியில் அமைந்துள்ள எமது இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டி நிகழ்வில் கலந்து கொள்வதுடன், மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:-
*N. குமார்,*
*230 புதியபுன்னை நீராவி,*
*விசுவமடு* (5484)

*உன்பிரிவால் வாடும், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.*




# மிகப் பெரியளவில் தாக்குதல் நடத்தும் பலத்தை அல்-ஹைய்தா இன்னமும் இழந்து விடவில்லை!

### ஐ. நா குழுவின் அறிக்கையில் பரிந்துரை

(நியூயோர்க்)

**அல்-ஹைய்தா தீவிரவாதிகளின் பலம் எந்த வகையிலும் இன்னமும் குறையவில்லை. மீண்டும் மிகப் பெரியளவில் அவர்கள் தாக்குதல் நடத்த முடியும். ஆனால் எங்கே? எப்போது? என்பதைச் சொல்ல முடியாதுள்ளது என ஐ.நா குழு அறிக்கை வெளியிட்டுள்ளது.**

கடந்த மூன்று ஆண்டுகளுக்கு முன்பு சர்வதேச தீவிரவாதி பின்லேடனின் 'அல்-ஹைய்தா இயக்கத்தினர் விமானங்களை மோதி நியூயோர்க்கில் உள்ள உலக வர்த்தக மையக் கட்டடத்தை தகர்த்தனர். ஐயாயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் இதில் பலியானார்கள். இதை அடுத்து பின்லேடனுக்கு அடைக்கலம் கொடுத்த ஆப்கானிஸ்தான் மீது அமெரிக்கா படையெடுத்து அங்கு தலிபான் ஆட்சியை அகற்றியது. அங்கு கர்சாய் தலைமையில் புதிய அரசு அமைந்தது.

ஆனாலும் அல்-ஹைய்தா தீவிரவாதிகளை முற்றிலுமாக ஒழிக்க முடியவில்லை. அல்-ஹைய்தா தீவிரவாத நடவடிக்கைகள் தொடர்பாக ஐக்கிய நாடுகளைச் சேர்ந்த பிரதிநிதிகளைக் கொண்ட குழு விசாரணை நடத்தித் தனது அறிக்கையை தாக்கல் செய்துள் ளது. அதில் கூறி இருப்பதாவது:-

அல்-ஹைய்தா தீவிரவாதிகளின் பலம் எந்த வகையிலும் இன்னும் குறையவில்லை. அந்த அமைப்புக்கு பொருளாதார நெருக்கடி ஏற்படுத்துவதாலோ, தடை விதிப்பதாலோ அவர்கள் நடவடிக்கை களைக் கட்டுப்படுத்தி விட முடியாது.

பேரழிவை ஏற்படுத்தும் இரசாயன ஆயுதங்கள், உயிரியல் ஆயுதங்கள் அணு ஆயுதங்கள் ஆகியவற்றை எளிதில் தயாரிக்கும் வசதி அவர்களுக்கு இருக்கிறது.

மீண்டும் மிகப் பெரிய அளவில் அவர்கள் தாக்குதல் நடத்த முடியும் எங்கே? எப்போது? என்பதுதான் கேள்வி. உலக நாடுகளுக்கு அல்-ஹைய்தா அமைப்பு தொடர்ந்து அச்சுறுத்தலாகவே இருக்கும்.

ஆப்கானிஸ்தானில் தலிபான்களின் பலமும் விரைவிலேயே அதிகரித்து விடும். ஆப்கானிஸ்தானை மீண்டும் தங்கள் தளமாக பயன்படுத்திக் கொள்ள அல்-ஹைய்தா திட்டமிட்டுள்ளது. அல்-ஹைய்தா ஆதரவுடன் தலிபான்கள் மீண்டும் ஆப்கானிஸ்தானில் ஆதிக்கம் செலுத்தத் திட்டமிட்டுள்ளனர்.

இவ்வாறு அந்த அறிக்கையில் ஐ.நா குழு கூறியுள்ளது.



வட ஈராக்கில் சுனி முஸ்லிம்களின் மொசூல் நகரில் அமெரிக்க படையினர் வீடு வீடாக தேடுதல் நடத்தியபோது அச்சத்துடன் காணப்படும் குடும்பமொன்றை படத்தில் காண்க.



சுனி முஸ்லிம்களின் பலூஜா நகரில் வீதியோர இராணுவ காவலரண் பகுதியில் அனுமதிக்காகக் காத்திருக்கும் ஈராக்கியர்

# ஜப்பானில் நேற்று பூகம்பம்

ஜப்பானில் நேற்றுக் காலை நிலநடுக்கம் ஏற்பட்டது தலைநகர் டோக்கியோவிற்கு வடக்கே 40 கிலோ மீற்றர் தூரத்தில் இந்த நலநடுக்கம் ஏற்பட்டது. ரிச்டர் அளவில் 5.4 புள்ளிகளாக இந்த நிலநடுக்கம் பதிவானது.

20 முதல் 30 நிமிடம் வரை நிலநடுக்கம் நீடித்தது. இந்த நிலநடுக்கத்தில் வீடுகளில் இருந்த பொருட்கள் உருண்டு கீழே விழுந்தன. ஆனால் பெரிய் அளவில் சேதம் ஏற்படவில்லை. ஒருசில கட்டடங்கள் மட்டும் இலேசான சேதம் அடைந்தன.

கடந்த 1995 ஆம் ஆண்டு ஜப்பானின் கோபே நகரில் ஏற்பட்ட நிலநடுக்கத்தில் 6400 [illegible]யானார்கள். கடந்த ஆண்டு நீகடாப் பகுதியில் பூகம்பம் தாக்கியதில் 40 பேர் பலியானர்கள்.






வியட்நாம் எயார் லைசன்சின் புதிய போயிங் 777-200ER ரக போக்குவரத்து விமானம் தலைநகர் ஹனோயில் நொய் பாய் விமான நிலையத்தில் தரையிறங்குகிறது.

# தாய்லாந்துப் பிரதமரின் வருகையைக் கண்டித்து நராதிவாத் மாகாணத்தில் குண்டுகள் வெடித்தன!

தாய்லாந்தில் நேற்று இரு இடங்களில் குண்டுகள் வெடித்தன. நராதிவாத் மாகாணத்தில் ராநாகி மாவட்டத்தில் ஒரு வங்கி அருகே நிறுத்தப்பட்டிருந்த பாரஊர்தியில் திடீர் என்று குண்டு வெடித்தது. அதே போல் ரீசோ மாவட்டத்தில் ரப்பர் தோட்டம் அருகேயும் திடீர் என்று குண்டு வெடித்தது. இந்தக் குண்டு வெடிப்புக்களில் 6 பேர் காயம் அடைந்தனர்.

தாய்லாந்து பிரதமர் தட்சின் ஷினோவத்ரா இந்தப் பகுதிகளில் சுற்றுப் பயணம் செய்யவும் புத்தமதத் தலைவர்களுடனும், முஸ்லிம் தலைவர்களுடனும் பேச்சு நடத்தவும் திட்டமிட்டிருந்தார்.

அவரைக் கொலை செய்யும் நோக்கத்துடன் இந்த சதித்திட்டம் திட்டமிடப்பட்டுள்ளது. அவர் வருவதற்கு சிலமணி நேரத்திற்கு முன் குண்டுகள் வெடித்து விட்டன குண்டு வெடிப்பினால் சேதமுற்ற வாகனம்.





# இந்தோனேஷியா, சீனாவில் சக்தி வாய்ந்த பூகம்பம் பிரிட்டன் புவியியல் ஆய்வாளர்களும் அதிர்ச்சி

கடந்த டிசம்பர் 26 ஆம் திகதி சுனாமிப் பேரழிவை ஏற்படுத்திய பூகம்பம் தாக்கிய சுமாத்திராவில் செவ்வாய்க்கிழமை காலையில் மீண்டும் சக்தி வாய்ந்த பூகம்பம் ஏற்பட்டுள்ளது. அதன் திறன் ரிச்டர் கருவியில் 6 எனப் பதிவாகியுள்ளது. அதேபோல சீனாவிலும் சக்தி வாய்ந்த பூகம்பம் செவ்வாய்க்கிழமை ஏற்பட்டது. அதன் திறன் ரிச்டர் கருவியில் 6.2 எனப் பதிவாகியுள்ளது.

பிரிட்டனிலும் இலேசான நில அதிர்வு திங்கட்கிழமை எற்பட்டுள்ளது.

இந்தோனேசியாவின் சுமாத்திரா தீவில் கடாங் என்ற ஊரில் செவ்வாய்க்கிழமை பூகம்பம் ஏற்பட்டது. அதன் மையப் புள்ளி அந்நகரிலிருந்து மேற்கு மற்றும் வட மேற்கில் 200 கி.மீ தொலைவில் கடலுக்கு அடியில் அமைந்திருந்தது ஏற்கெனவே பூகம்பத்தாலும் சுனாமியாலும் பேரழிவைச் சந்தித்த பண்டா ஆசேயிலிருந்து தென்கிழக்கில் 900 கி.மீ தொலைவில் உள்ளது இந்த நகரம். அதனால் ஏற்பட்ட சேதங்கள் பற்றிய விபரம் தெரியவில்லை.

வடமேற்கு சீனாவில் ஸின்ஜியாங் உய்குர் தன்னாட்சிப் பகுதியில் உள்ள வூஷி என்ற ஊரில் செவ்வாய்க்கிழமை இந்திய நேரப்படி அதிகாலை 5.08 மணிக்கு பூகம்பம் ஏற்பட்டது அதன் திறன் ரிச்டர் கருவியில் 6.2 ஆகப் பதிவாகியுள்ளது. உயிர்ச் சேதம், பொருள் சேதம் பற்றி இதுவரை தகவல் இல்லை.

அபூர்வ சம்பவமாக பிரிட்டனின் வடக்கு வேல்ஸ் பகுதியில் உள்ள கால்வின் வளைகுடாவுக்குத் தென்கிழக்கே திங்கட்கிழமை இந்திய நேரப்படி நள்ளிரவு 12.14 மணிக்கு நிலநடுக்கம் ஏற்பட்டது. அதன் திறன் ரிச்டர் கருவியில் 3:1 எனப் பதிவாகியுள்ளது.

புவியியல் ஆய்வாளர்களைப் பொறுத்தவரை அது லோசான நில அதிர்வாக இருந்தபோதிலும், பிரிட்டனைப் பொறுத்தவரை அது "அதிக கவனத்துக்குரிய" நிகழ்ச்சியாகும் என்ற பிட்டிஷ் புவியியல் ஆய்வு நிறுவன அதிகாரி கூறினார்.

" பெரும் சத்தம் கேட்டது: கட்டடங்கள் அதிர்ந்தன: பொருட்கள் நகர்ந்தன" என்று தொலைபேசியில் மக்கள் கூறியதாக வடக்கு வேல்ஸ் பொலிசார் கூறினர்.

# சவுதி அரேபியாவுடனான நெருங்கிய தொடர்பால் லெபனானின் முன்னாள் பிரதமர் கொல்லப்பட்டார்

### -தாக்குதல் நடத்திய இஸ்லாமியக் குழு அறிவிப்பு

லெபனான் நாட்டின் முன்னாள் பிரதமர் ரபீக் அல்ஹரீரி கார்க் குண்டு வெடித்துப் பலியானார். 5 முறை பிரதமராக இருந்த அவருடன் 11 பேர் பலியானார்கள். 100 பேர் காயம் அடைந்தனர். இந்த கொலைக்கு இதுவ்ரை அறியப்படாத ஒரு இஸ்லாமியக்குழு பொறுப்பு ஏற்றுள்ளது. சவுதி அரேபிய ஆட்சியாளர்களுடன் நெருங்கிய தொடர்பு வைத்திருந்தால் கொலை செய்ததாக அந்தக் குழு கூறியுள்ளது.

ஹரீரி கொல்லப்பட்டதற்கு உலக நாடுகள் கண்டனம் தெரிவித்துள்ளன. லெபனானை சீரமைப்பதில் சாதனை படைத்ததாக அவை பாராட்டின. சுதந்திரமான, வளமான லெபனானை உருவாக்க இடைவிடாமல் பாடுபட்டவர் என்று பாராட்டிய அமெரிக்க சனாதிபதி புஷ், சிரியாக்தான் அவரைக் கொலை செய்து இருக்கவேண்டும் என்றும் சந்தேகம் எழுவதாகவும் குற்றம் சாட்டினார்.

கார்க்குண்டு மூலம் ஹரீரியைக் கொலை செய்தது யார் என்பதைக் கண்டறிய சர்வதேச அளவில் விசாரணை ஆணைக் குழு அமைக்க வேண்டும் என்று பிரெஞ்சு அதிபர் ஜாக்குயஸ் சிராக் கூறினார். குவைத், எகிப்து, ஜோர்டான், பலஸ்தீனம், இங்கிலாந்து, ஸ்பெயின், சவுதி அரேபியா ஆகிய நாடு கள் இந்தக் கொலையைக் கண்டித்துள்ளன.

#### 350 பேர் சாட்சியம்

உலகப் புகழ் பெற்ற 'பாப் பாடகர் மைக்கேல் ஜாக்சனுக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்க ஹொலிவுட் நடிகை எலிசபெத் டெய்லர் உட்பட பல பிரபலங்கள் முன்வந்துள்ளனர்.

" மைக்கேல் ஜாக்சன் 13 வயதுச் சிறுவனிடம் முறைகேடாக நடந்து கொண்டதாகக் கூறி சாண்டா பாப்ரா நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டுள்ளது. இந்த நிலையில் ஜாக்சனுக்கு ஆதரவாக சாட்சியம் சொல்ல 350 பேர் கொண்ட பட்டியலை அவரது வக்கீல் டாம்மெசரா தயாரித்து இருக்கிறார்.

# கொலம்பியா, வெனிசுவெலாவில் வெள்ளம்

கொலம்பியா, வெனிசுலா நாடுகளில் ஏற்பட்ட கடும் வெள்ளத்தில் பலியானோர் எண்ணிக்கை 80 ஆக உயர்ந்தது. கடந்த சில நாட்களாக கொலம்பியாவின் சன்டேன்டர், நோர்டி டி சன்டேன்டர் ஆகிய பகுதிகளில் கடும் புயற் காற்றுடன் மழை பெய்கிறது. அதே போல் வெனிசுலாவின் மெரிடாப் பகுதியிலும் கடும் மழைபெய்கிறது. இதனால் பயங்கர வெள்ளப் பெருக்கு ஏற்பட்டு ஏராளமான வீடுகள் இடிந்து தரைமட்டமாகி விட்டன. பொதுவாக இந்தக் காலகட்டங்களில் இது போன்ற மழை இருக்காது என்று கொலம்பியா அவசர கால செயற்பாட்டுப் பிரிவு அதிகாரிகள் தெரிவித்தனர். வெனிசுவெலாவிலும், ஐம்பது பேர் பலியாகி உள்ளனர். நதிகளில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுவதால் மீட்புப் பணிகள் தாமதாகி வருகின்றன. கொலம்பியாவில் ஏற்பட்ட வெள்ளத்தால், 40 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் இடம்பெயர்ந்துள்ளனர்.

# அவுஸ்திரேலியா-சிட்னி நகரில் கௌசல்யன் நினைவு நிகழ்வு

லெப். கேணல் கௌசல்யனினதும் சக போராளிகளினதும், மாமனிதர் அரியநாயகம் சந்திரநேரு அவர்களினதும் நினைவுகூரும் நிகழ்ச்சிக்கூட்டம் கடந்த திங்கட் கிழமை அவுஸ்திரேலியா சிட்னி நகரில் மிகவும் உணர்வுபூர்வமாக நடைபெற்றது.

இந் நினைவுகூரும் நிகழ்ச்சிக் கூட்ட நிகழ்வில் தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவின் சிட்னி பணிப்பாளர் கு.சஞ்சயன் பொதுச்சுடரை ஏற்றி ஆரம்பித்து வைக்க மாவீரன் மேஜர் சலீம் பிரின்ஸ்ரனனின் சகோதரி சோனா பிரின்சும், மேஜர் வின்சன்ட்டின் சகோதரர் களுவாஞ்சிக்குடி யோகனும், வீரவேங்கை குட்டி ஜெமினின் தாயார் திருமதி. சுப்பிரமணியமும், மேஜர் டயஸ் கந்தசாமியின் சகோதரன் தனபாலும், மேஜர் விள்ளுவின் சகோதரி பத்மினி சோதிராசாவும் ஈகச்சுடர் ஏற்றிவைக்க, பொதுமக்களின் மலர்வணக்கமும் நடைபெற்றது. தென்துருவ தமிழ்ச் சங்கசம் மேளனத் தலைவர் அனா பரராஜசிங்கமும், சிட்னி தமிழர் ஒருங்கிணைப்புக் குழு பணியகத்தின் சார்பில் தனபாலும், நியூ சவுத்வேல்ஸ் தமிழ் அமைப்புக்களின் ஒன்றியத்தின் சார்பாக அதன் செயலாளர் ஜேம்ஸ் சுகுமாரும், திருமதி. பத்மினி சோதிராசாவும் உரையாற்றினார்கள். களுவாஞ்சிக்குடி யோகன் கவிதை வாசித்தளித்தார். இதனைத் தொடர்ந்து கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற லெப். கேணல் கௌசல்யன், மேஜர்.புகழன், மேஜர் செந்தமிழன், 2ம் லெப். விதிமாறன் ஆகியோரின் இறுதி வணக்க நிகழ்வுகளின் ஒளிநாடா அகலத்திரையில் காண்பிக்கப்பட்டது.





# கிளி.நலவாழ்வு அபிவிருத்தி நிறுவனத்தால் மருத்துவமனைக்கு பொருட்கள் அன்பளிப்பு

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சியில் உள்ள நலவாழ்வு அபிவிருத்தி நிறுவனத்தினால் மாவட்ட வைத்தியசாலைக்கு ஒரு தொகுதி பொருட்கள் அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளது.



தமிழீழ சுகாதார சேவையுடன் இணைந்து இயங்கும் நிறுவனமான நலவாழ்வு அபிவிருத்தி நிறுவனம் மாவட்ட வைத்தியசாலைக்கு ஒரு தொகுதி படுக்கை விரிப்புக்களையும் சத்திர சிகிச்சைக்குப் பயன்படுத்தப்படும் துவாயகள் மற்றும் மருந்துகள் என்பவற்றையும் நேற்று முன்தினம் மாலை 4.00 மணியளவில் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் வைத்து வைத்தியகலாநிதி பிறைற்றன் அவர்களிடம் நலவாழ்வு நிறுவன இணைப்பாளர் திலகன் கையளித்தார். (கு)

# சுனாமியால் பலியானோரின் நினைவாக பிரான்சில் நிகழ்வு


ஆழிப்பேரலையில் பலியான மக்களின் நினைவாக பிரான்ஸ் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் நடத்திய சலங்கை பரத நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. மாலை 4.15 மணியளவில் ஆரம்பமான இந்நிகழ்வில் நினைவுச் சுடரினை பரிஸ் 12 மாநகர சபையின் உதவி நகரபிதா திருமதி. மொனிக் லுபுளோன் அம்மையாரும் துனி நகரசபையின் அங்கத்தவர் அலன் ஆனந்தனும் ஏற்றி வைத்தார்கள். அதனைத்தொடர்ந்து அக வணக்கத்துடன் நிகழ்வு ஆரம்பமாகியது. பிரதம விருந்தினராக வல்து மாறன் பாராளுமன்ற உறுப்பினர் ஜோன் குளோத் லுவோர் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினார். அவர் கடந்த வாரம் பிரான்ஸ் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் வேண்டுகோளுக்கிணங்க ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட [illegible]ங்கு [illegible]க்குப் பகுதிகளுக்கு நே[illegible]ாகச் [illegible]சன்று அந்த மக்களின் அ[illegible]ல [illegible]யையும் தமிழர் புனர்வாழ்வு[illegible] கழகத்தின் வேலைத்திட்டங்களையும் பார்த்து வந்த அவர் பேசும் போது, - வடக்கு கிழக்கு மக்களுக்கு சிறிலங்கா அரசாங்கத்தின் உதவிகள் சரியான முறையில் கிடைக்கவில்லை என்பதை நான் உணர்கிறேன். தமிழர் புனர்வாழ்வுக் கழகமே அந்த மக்களுக்கு முழு உதவிகளையும் செய்கிறார்கள். இங்கிருந்து செல்லும்போது நண்பர்களை பார்க்கச் செல்லும் மன நிலையில் சென்றேன். திரும்பி வரும்போது சகோதரர்களைப் பிரிந்துவரும் வேதனையுடன் வந்தேன். வெளிநாடுகளில் இருந்து சிறிலங்காவிற்குக் கிடைக்கும் உதவிகள் சகல பகுதிகளுக்கும் சமமாகப் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும் என்பதே பிரான்ஸ் அரசாங்கத்தின் நிலைப்பாடு. "வடக்கு கிழக்குப் பகுதிகளைப் பொறுத்தவரை தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினால் செய்யப்படும் வேலைத்திட்டங்கள் மிகவும் பாராட்டுக்குரியது. நீங்கள் கொடுக்கும் உதவிகள் சரியான முறையில் அங்கே பயன்படுத்தப்படுகின்றன. எல்லா மக்களும் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்திற்கு தொடர்ந்து உதவிகளை வழங்கவேண்டும்"- என்றார்.

இந்நிகழ்வில் பதினெட்டு பரத ஆசிரியர்களால் நெறிப்படுத்தப்பட்ட இருபத்தொன்பது நடனங்கள் நடைபெற்றன. ஆசிரியர்களும் நடனங்களை வழங்கி நிகழ்வை சிறப்பித்தனர். இதில் 175இற்கும் மேற்பட்ட பரத மாணவர்கள் பங்கு பற்றினர். இவற்றில் பல நடனங்கள் கடற்கோள் அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் துயர நிலையை எடுத்துக்கூறின. தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் தற்போதைய செயற்பாடுகள் பற்றியும் பயன்பெற்ற மக்கள் சார்பாக பிரான்ஸ் வாழ்மக்கள் வழங்கிய உதவிகளுக்கு நன்றி தெரிவித்தும் தமிழர் புனர்வாழ்வுக் கழக பிரான்ஸ் கிளைப் பிரதிநிதி த.விநாயகமூர்த்தி பேசினார். இந் நிகழ்வில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் கலந்து கொண்டனர். இதில் இம்முறை பிரான்ஸ் மக்களும் கலந்து கொண்டது குறிப்பிடத்தக்கது. பிரான்ஸ் மொழியில் அகிலன் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் செயற்பாடுகள் பற்றிப் பேசினார். பிரான்ஸ் தமிழ் இளையோர் அமைப்பினரால் தொகுக்கப்பட்ட ஆழிப்பேரலை அழிவுக் காட்சிகள் பிரெஞ்சு மொழி பெயர்ப்புடன் திரையில் காண்பிக்கப்பட்டது. டொமினிக்கின் நன்றி உரையுடன் நிகழ்வு 9.45 மணிக்கு நிறைவு பெற்றது.

# வாகரையில் கௌசல்யன் உள்ளிட்ட மாவீரர்களின் வீரவணக்க நிகழ்வு

(அலுவலக செய்தியாளர்)

மட்டு. அம்பாறை மாவட்ட



அரசியல்துறைப் பொறுப்பாளர் லெப். கேணல் கௌசல்யன் உட்பட நான்கு போராளிகள் மற்றும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் மாமனிதர் சந்திரநேரு அவர்களினதும் கொலையைக் கண்டித்து கடந்த வெள்ளியன்று மட்டக்களப்பு வாகரைப் பிரதேசத்தில் வீரவணக்க நிகழ்வு இடம் பெற்றது.

வாகரைப் பிரதேச அரசியல் துறைப் பொறுப்பாளர் காளி தலைமையில் நடைபெற்ற மேற்படி வணக்க நிகழ்வில் லெப். கேணல் கௌசல்யன் உட்பட நான்கு மாவீரர்களினதும், மாமனிதர் சந்திர நேருவினதும் திருவுருவப்படங்களுக்கு வாகரைப் பிரதேச கட்டளைத் தளபதி லெப். கேணல் அறிவு ஈகச்சுடரினை ஏற்றிவைக்க திருவுருப்படங்களிற்கான மலர் மாலையினை திருமலை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் எழிலன் அணிவித்தார். அகவணக்கத்தினைத் தொடர்ந்து நினைவுரையினை வாகரைப் பிரதேச செயலர் உதயகுமார் நிகழ்த்தினார். தொடர்ந்து வீரவணக்க உரையினை திருமலை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் எழிலன் நிகழ்த்தினார்.

மேற்படி நிகழ்வில் வாகரை மற்றும் அதனை அண்டிய பிரதேசங்களைச் சேர்ந்த பெருமளவிலான மக்கள் உணர்வுபூர்வமாக கலந்து மாவீரர்களினதும், மாமனிதரினதும் திருவுருப்படங்களுக்கு மலரஞ்சலி செலுத்தினர். (சோ)

# பன்றிகளால் பயிர்கள் அழிவு விவசாயிகள் கவலை

(கிளிநொச்சி)

திருவையாறுப் பகுதியில் பன்றிகளின் தொல்லைகள் அதிகரித்துள்ள[illegible]ல் விவசாயிகள் தொடர்ந்து[illegible] பயிரழிவுகளை சந்தித்து வருகின்றனர்.

திருவையாறு, சாந்தபுரம் அம்பாள் நகர், கனகாம்பிகைக் குளம் ஆகிய பிரதேசங்களில் காட்டுப்பன்றிகளின் நடமாட்டம் அதிகரித்துள்ளது. இதனால் இப்பகுதி விவசாயிகள் தொடர்ந்தும் பயிர் அழிவுகளைச் சந்தித்து வருகின்றனர். (15)

## பொதுக்கூட்டம்

கிளி/ இராமநாதபுரம் மகாவித்தியாலயத்தின் பாடசாலை அபிவிருத்திச் சங்க பொதுக்கூட்டம் எதிர்வரும் 18.02.2005 (வெள்ளிக்கிழமை) பி.ப 2.00 மணிக்குப் பாடசாலை பொதுமண்டபத்தில் நடைபெறவுள்ளது. பெற்றோர், ஆசிரியாகள், பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள் யாவரையும் கலந்து கொள்ளுமாறு பாடசாலை நிர்வாகத்தினர் கேட்டுக்கொள்கின்றனர். (12)

# துணுக்காய் பிரதேசத்தில் நடைபெற்ற "நியாப்-II" திட்ட அறிமுகக் கூட்டம்

முல்லை.மாவட்ட துணுக்காய் பிரதேசத்தில் "நியாப்-II" திட்டத்தின் கீழ் மையக் கிராமங்களைத் தெரிவு செய்து அபிவிருத்திகளை மேற்கொள்வதற்கான அறிமுகக் கூட்டங்கள் நேற்று முன்தினம் காலை 11.00 மணிக்கு ஆலங்குளம் கொக்காவில் சித்தி விநாயகர் ஆலய முன்றலில் நீர்ப்பாசன பிரதித்திட்டப் பணிப்பாளர் சிவகுமார் தலைமையில் இடம்பெற்றது.

இதில் மங்கலவிளக்கினை பிரதித்திட்டப் பணிப்பாளர் சிவகுமார், வவுனிக்குள பொறியியலாளர் தவக்குமார் ஆகியோர் ஏற்றி வைத்தனர்.

தொடர்ந்து நியாப் திட்டத்தின் கீழ் மையக் கிராமங்களைத் தெரிவு செய்து அதற்கான அபிவிருத்திகளை மேற்கொள்ள மக்களின் பங்களிப்புக்கள் தேவையென்றும் இதன் போது மூன்று மையக் கிராமங்களான ஆலங்குளம், உயிலங்குளம் அனிச்சியங்குளம் ஆகிய கிராமங்களின் வீதிகள் பொது நோக்கு மண்டபங்கள் பொதுக் கிணறுகளும், குளங்கள் என்பன அபிவிருத்தி செய்வதற்கு தெரிவு செய்யப்பட்டன.

இதன் போது ஜீவனோபாய ஆதார அடிப்படையில் குறைந்த வட்டி மூலம் கடன் வழங்க வேண்டுமெனப் பலர் கருத்துரை வழங்கினர். (24)



கைதடி மத்தியில் நினைவுத்தூபி திறப்பு நிகழ்வில்.... (படங்கள் : ஆன்சலின்)

# வெடிவிபத்தில் வீரச்சாவடைந்தோர் நினைவாக கைதடியில் நினைவுத்தூபி திறந்து வைப்பு

(தென்மராட்சி)

**கைதடிப் பகுதியில் 1986 ஆம் ஆண்டு இடம் பெற்ற எதிர்பாராத வெடிவிபத்தில் வீரச்சாவடைந்த லெப்.கேணல் பொன்னம்மான் உள்ளிட்ட போராளிகள் மற்றும் பொதுமக்கள் நினைவாக கைதடி மத்தியில் அமைக்கப்பட்ட நினைவுத்தூபி திறப்பு விழா கடந்த திங்கட்கிழமை மாலை 5.00 மணிக்கு நடைபெற்றது.**

தென்மராட்சிக் கோட்ட அரசியல்துறைப்பொறுப்பாளர் பொ.ஈஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பொதுச் சுடரை யாழ்.மாவட்ட அரசியல் துறை துணைப்பொறுப்பாளர் கண்ணன் ஏற்றிவைத்தார்.

தேசியக்கொடியை யாழ். மாவட்ட விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் மாதுளன் ஏற்ற, நினைவுத்தூபியை பாராளுமன்ற உறுப்பினர் சிவநேசன் திரைநீக்கம் செய்தார்.

எதிர்பாராத வெடிவிபத்தின் போது உயிர் நீத்த போராளிகள் பொதுமக்களின் நினைவாக அமைக்கப்பட்ட நினைவுத்தூபிக்கு சமீபமாக முன்பள்ளி அமைப்பதற்கான அடிக்கல் நாட்டப்பட்டது. தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களான பத்மினி சிதம்பரநாதன், சிவநேசன், என்.ரவிராஜ் மற்றும் தென்மராட்சிக் கோட்ட மகளிர் அரசியல் துறைப் பொறுப்பாளர் அலைவாணி ஆகியோர் கட்டடத்திற்கான அடிக் கல்லை நாட்டினர். இந்த நிகழ்வைத் தொடர்ந்து இந்தச் சம்பவம் நடைபெற்ற 19 ஆவது ஆண்டு நினைவு நாள் அஞ்சலிக் கூட்டம் நடைபெற்றது. தென்மராட்சிக் கோட்டப் பொறுப்பாளர் பொ.ஈஸ்வரன், பாராளுமன்ற உறுப்பினர்களான பத்மினி சிதம்பரநாதன், ரவிராஜ் ஆகியோர் அஞ்சலி உரை நிகழ்த்தினர்.

### வீட்டார் சத்தம் இட்டதால்

# ஈருருளியைக் கைவிட்டு திருடர்கள் தப்பி ஓட்டம்

(நல்லூர்)

நள்ளிரவு நேரம் வீட்டினுள் நுழைந்து திருட முற்பட்டவர்கள் வீட்டார் சத்தம் இட்டதைத் தொடர்ந்து ஈருருளி, 3சோடி பாதணிகள் மின்குமிழ் என்பவற்றைக் கைவிட்டு ஓடித்தப்பியுள்ளனர்.

நல்லூர் வைமன் வீதியில் உள்ள வீடொன்றில் இச் சம்பவம் இடம் பெற்றது. உரிய இடத்திற்கு உடன்சென்ற யாழ்ப்பாணம் நல்லூர் கோட்ட அரசியல்துறையினர் திருடர்கள் கைவிட்டுச் சென்ற பொருட்களைக் கைப்பற்றியதுடன் திருடர்கள் சம்பந்தமான விபரங்களையும் சேகரித்து வருகின்றார்கள். (41)

# கடலில் மிதந்து வரும் பொருட்கள் எடுக்க அலையும் கடற்படையினர்

(யாழ்ப்பாணம்)

யாழ்.வடமராட்சிக் கடற்கரையோரங்களில் இந்தியா மற்றும் இந்தோனேஷியா நாட்டுப்பொருட்கள் கரையொதுங்கி வருகின்றன.

வீட்டுப்பாவனைப் பொருட்கள், மதுபானவகைகள், புடவைகள் வாசனைத்திரவியங்கள், பொதிகள், றபர்ச்சில்லுகள் என்பன இவ்வாறு கரையொதுங்கிவருகின்றன.

இவற்றை எடுப்பதற்காகத் தினமும் கடற்படையினர் அதிகாலை வேளைகளில் கடற்கரையோரங்களில் கூட்டம்கூட்டமாக அலைந்து திரிகின்றனர்.

இது இவ்வாறிருக்க கரையொதுங்கும் பொருட்கள் இனந்தெரியாத வெடிபொருட்களாகவும் இருக்கலாம் எனவும் சிறிலங்கா கடற்படையினர் பொதுமக்களை மிரட்டி அவற்றை எடுக்கவேண்டாமென எச்சரித்தும் வருகின்றனர். (33)

# வடமராட்சியில் சுனாமியின் தாக்கத்தினால் 65 முன்பள்ளிகள் சேதமடைந்துள்ளன!

### 112 முன்பள்ளி சிறார்களும் உயிரிழப்பு

(பருத்தித்துறை)

வடமராட்சியில் ஏற்பட்ட சுனாமி தாக்கத்தினால் 65 முன்பள்ளிகள் சேதமடைந்துள்ளன. 112 முன்பள்ளி சிறார்கள் இறந்திருப்பதாகவும், அங்கிருந்து கிடைக்கும் புள்ளி விபரம் ஒன்றில் இருந்து தெரிய வந்துள்ளது. மற்றும் இரண்டு முன்பள்ளி ஆசிரியைகள் இறந்திருக்கின்றனர். இருவர் காயமடைந்திருக்கின்றனர்.

இதேவேளை இப்பகுதியில் 115 முன்பள்ளி ஆசிரியைகளுக்கு வேதனம் வழங்க முடியாத நிலையும் ஏற்பட்டுள்ளது. முன்னர் கடற்றொழில் சங்கங்கள் மற்றும் சமாசம், நிறுவனங்கள் இவர்களது சம்பளத்தை வழங்கி வந்தனர். சுனாமியின் தாக்கத்தினால் மேற்குறித்த நிறுவனங்கள் அமைப்புக்கள் அழிந்து விட்டதினால் ஆசிரியைகளுக்கு சம்பளம் வழங்குவதில் பெரும் நெருக்கடி நிலை ஏற்பட்டுள்ளதாக வடமராட்சி முன்பள்ளிக் கல்வி உதவிக்கல்விப் பணிப்பாளர் துரை சத்தியசீலன் தெரிவித்தார்.

மேலும் முன்பள்ளி ஆசிரியைகளுக்கான உடு புடவைகள், முன்பள்ளிக்கு சென்று வருவதற்கான துவிச்சக்கர வண்டிகள் மற்றும் முன்பள்ளி மாணவர்களுக்கு உடுபுடவைகள், கற்றல் உபகரணங்கள் என்பனவும் தேவைப்படுவதாகவும், உடுபுடவைகள், துவிச்சக்கர வண்டிகள் என்பவற்றை அப்பகுதி ஆசிரியைகள் இழந்து விட்டதினால் இப்பணியைச் செய்வதில் பெரும் கஷ்ட நிலையை எதிர்நோக்கி வருவதாக தெரிவிக்கப்படுகிறது. (45)

# பெற்றோரை இழந்த மாணவர்களிற்கு கற்றல் உபகரணங்கள் வழங்கல்

(பருத்தித்துறை)

சுனாமியால் பாதிக்கப்பட்டு வட.இந்து மகளிர் கல்லூரியில் கல்வி கற்கும் பெற்றோரை இழந்த மாணவர்களுக்கு தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தால் பெப்ரவரி 10 ஆம் திகதி அதிபர் ஊடாக கற்றல் உபகரணங்கள், உடைகள் என்பன வழங்கப்பட்டன.

மற்றும் வடமராட்சி பகுதியில் சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட முன்பள்ளி ஆசிரியர்களுக்கும் யாழ். மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினர் ஒரு தொகுதி உணவுப்பொருட்கள், உடுபுடவைகள், சாப்பாட்டுக் கோப்பைகள், பால்மா வகைகள், பிளாஸ்ரிக் பேசின், பிளாஸ்ரிக் வாளி, குழந்தைகளுக்கான ஆடைகள் உலர் உணவுகள் ஆகியவற்றை வழங்கியுள்ளதோடு சாரம், துவாய், பெட்சீற் ஆகியவற்றையும் வழங்கியுள்ளனர். (45)

# சுனாமியால் உயிரிழந்தோர் நினைவாக மணற்காட்டில் நினைவாலயம்

(பருத்தித்துறை )

வடமராட்சி பிரதேச கடற்றொழிலாளர் சங்கங்களின் பிரதிநிதிகளும், பொதுமக்களும் இணைந்து நினைவாலயம் அமைக்கும் முயற்சிகளில் ஈடுபட்டுள்ளனர்.

வடமராட்சி மணற்காட்டில் ஆழிப்பேரலையினால் பலியான பொதுமக்கள் நினைவாக மணற்காட்டில் நினைவாலயம் அமைக்கப்படவுள்ளது. (45)

# கூட்டுறவுப் பணியாளர் மூவருக்கு சேவை நலம் பாராட்டு

(பருத்தித்துறை)

உடுப்பிட்டி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் பணியாளர்களாக இருந்து ஓய்வு பெற்ற மூவருக்கு சங்க மண்டபத்தில் சேவை நலம் பாராட்டு விழா நடை பெற்றது. இச்சங்கத்தில் பணியாற்றிய செ.சுந்தரமூர்த்தி, நீ. சுப்பிரமணியம், க. சீவரத்தினம் ஆகியோரே ஓய்வு பெற்றவர்களாவர். இவர்களை சங்கப்பணிப்பாளர், பணியாளர்கள் பாராட்டிக்கௌரவித்தனர். (45)

# 2004இல் 39,769 வாகனங்கள் குடாநாட்டில் புதிதாகப் பதிவு

(நல்லூர்)

யாழ்.மாவட்டத்தில் கடந்தாண்டு மார்கழி மாதம் வரை 39 ஆயிரத்து எழுநூற்றி அறுபத்தொன்பது வாகனங்கள் புதிதாகப்பதிவு செய்யப்பட்டுள்ளதாக யாழ்.செயலக புள்ளி விபரங்கள் மூலம் அறியக் கூடியதாக இருக்கின்றது.

இதில் உந்துருளிகள் 37 ஆயிரத்து முந்நூற்றி எட்டும், மோட்டார் வண்டிகள் (கார்) இரண்டாயிரத்து நூற்றி அறுபத்தேழும், விவசாய உபயோகவாகனங்கள் ஆயிரத்து அறுநூற்றி தொண்ணூற்றி ஐந்தும், கை உழவுஇயந்திரம் தொளாயிரத்தி பத்தும், பாரவூர்திகள் ஆயிரத்தி நூற்றி தொண்ணூற்றி ஒன்பதும், பயணிகள் வாகனங்கள் அறுநூற்றி .ஐம்பத்தாறும், முச்சக்கர வண்டிகள் ஆயிரத்து முந்நூற்றி பதினைந்தும் மற்றும் இரட்டைப் பயன்பாட்டு வாகனங்கள் ஐநூற்றி பத்தொன்பதும் அடங்கும்.

வாகனங்களின் பயன்பாடு குடாநாட்டில் அதிகரித்துள்ள போதிலும் வீதிகளில் எந்த வகையான மாற்றங்களும் செய்யப்படவில்லையென்பதும் குறிப்பிடத்தக்கதாகும். (41)

# ஆறுசங்கக் கிளைகள் செயற்பட ஆரம்பித்துள்ளன

ஆழிப்பேரலையினால் சேத மடைந்த ஆறு சங்கக் கிளைகள் மீண்டும் செயற்பட ஆரம்பித் துள்ளன. வடமராட்சி வடக்கில் பருத்தித்துறை பல நோக்குக் கூட்டுறவுச்சங்கத்திற்குச் சொந்த மான கிளைகள் தற்போது செயற் பட ஆரம்பித்துள்ளன. இரண்டு கிளைகள் நிரந்தரக் கட்டடத்திலும் மற்றையவை தற் காலிக கட்டடத்திலும் செயற்பட்டு வருவதாக சங்க வட்டாரங்களில் இருந்து தெரியவந்துள்ளது. (45)

# கோழிக்குஞ்சுகளைப் பெற பதிவு செய்க

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை அரசினர் கால்நடை வைத்தியசாலையில் வைத்து நல்லின சேவல் மற்றும் பேட்டுக் கோழிக்குஞ்சுகள் விநியோகிக்கப்படவுள்ளன.

எதிர்வரும் 22 ஆம் திகதி முதல் இவை விநியோகிக்கப் படவுள்ளதால் பண்ணையாளர்கள் அவற்றை நேரடியாகவே பெற்றுக் கொள்ளலாம். எனினும் கோழிக் குஞ்சுகளைப் பெறவிரும்புவோர் முற்கூட்டியே பதிவுகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (33)

# விடுதலைப்புலிகளைப் புறந்தள்ளினால் சிறிலங்கா பாரிய விளைவை எதிர்கொள்ளும்

ராவய சிங்கள நாளிதழ்
பேராசிரியர் ஜெகான் பெரேரா
மொழியாக்கம்:- அ.சத்திவேல்

இலங்கை சரித்திரத்தில் பெரும் பேரழிவை ஏற்படுத்திய சுனாமி பேரலைக்கு ஒரு மாதத்திற்குமேலாகிறது. ஆனாலும் இரண்டு தசாப்தங்களில் ஏற்பட்ட யுத்த அனர்த்தங்களுக்கு நாம் பங்காளியாக இருக்கிறோம். தற்பொழுது ஏற்பட்டுள்ள சுனாமி அனர்த்தம் இவை எல்லாவற்றிக்கும் ஒரு முற்றுபுள்ளியை வைத்துள்ளது. உண்மையில் இலங்கை சரித் திரத்தில் இந்த சுனாமிப் பேரலை இரண்டாவது சந்தர்ப்பத்தை நமது நாட்டிற்கு உண்டு பண்ணித் தந்துள்ளது. போர் நிறுத்த உடன்படிக்கை ஏற்பட்டு முதலாம் வருடத்தில் டோக்கியோ உதவி வழங்கும் சம்மேளனத்தின் பின் சர்வதேசக் கவனம் எமது பக்கம் திரும்பியது. அத்துடன் சர்வதேச சமூகம் எமக்கு உதவிகளை வழங்குவதற்கு முன் வந்தது. ஆனால் கடந்த அரசாங்கமும் இன்றைய அரசாங்கமும் இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தத் தவறி விட்டன.

இந்தச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி நாட்டில் சமாதானத்தை விடுதலைப்புலிகளுடன் ஏற்படுத்தி இருந்தால் இன்று நாம் சமா தான முன்னெடுப்பில் அதிக தூரம் பயணித் திருக்கலாம். இந்தச்சந்தர்ப்பம் எமக்குக் கிட் டாமல் இருப்பதற்கு முதற்காரணம் அவ நம்பிக்கையும், சந்தேகமுமேயாகும். இந்த அனர்த்தங்களின் பின் மீண்டும் சர்வதேச நாடுகளின் கவனங்கள் எம்பக்கம் திரும்பியுள்ளது. இதனால் நிதியுதவிகள், பொருளாதார உதவிகள் எமது நாட்டுக்கு வந்த வண்ணமுள்ளன. மேலும் உதவிகள் செய்யப்போவதாக பல நாடுகள் முன்வந்துள்ளன. இந்த உதவிகளைப் பெற்றுக் கொள்வதற்கு அரசாங்கம் சம்மதமா? அப்படியானால் விடுதலைப்புலிகளுடன் ஒரு உடன்பாட்டுக்கு வந்து இந்தச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தினால் அரசுக்கு ஏற்பட்டுள்ள முட்டுக்கட்டைகள் யாவும் தீர்க்கப்பட இடமுண்டு.

சுனாமி அலைகள் இனம், மதம், சிங்களம், தமிழ், முஸ்லிம் என்று பாகுபாடுகாட்டவில்லை. ஆனபடியால் பாதிக்கப்பட்ட சகலரையும் ஒன்றிணைத்துக்கொண்டு அரசு செயற்படவேண்டும். மக்கள் சுனாமிப்பேரழிவினால் ஒன்று பட்டாலும் அரசியல் தலைவர்கள் ஒன்றுபடவில்லை. விசேடமாக சுனாமி அனர்த்தங்களுக்குப் பின்னும் அதற்கு முன்னும் இருந்த அரசியல் நிலையில் எந்த மாற்றங்களும் கிடையாது. விடுதலைப்புலிகளும் அரசும் ஒன்றிணைந்து பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் செயற்படுகிறார்கள் என ஊடகங்களும் அரசும் தெரிவித்திருந்தாலும், ஆனால் இன்று வரை அவர்கள் தனித்தனியாகவே செயற்பட்டு வருகின்றனர்.

விடுதலைப்புலிகளை எடுத்துக்கொண்டால் இதைவிடப் பெரும் பிரச்சினைகளுக்கு அவர்கள்வென்றுமுகம் கொடுத்துள்ளனர். விடுதலைப்புலிகள் முகம் கொடுத்த ஒவ்வொரு பிரச்சினைகளையும் அவர்கள் வென்று கொண்டு முன்னேறித் தங்களைப் பலப்படுத்திக் கொண்டுள்ளனர். அவர்கள் ஒரு கட்டுப்பாடான போராளி இயக்கம் அவர்களுக்குப்பெரும் இழப்பு ஏற்பட்டுள்ளதென அரசு கணிப்பீடு செய்யுமானால் அது அவர்களின் பலவீனமாகும். விடுதலைப்புலிகளுக்கும் அரசுக்கும் உள்ள இடைவெளியில் எந்த மாற்றங்களும் கிடையாது. இந்த இடைவெளியை நிரப்புவதற்கு அரசு முயற்சி செய்யவேண்டும். விடுதலைப்புலிகள் அன்று அதிக பலம் வாய்ந்தவர்களாக இருந்த பொழுது இடைக்கால நிர்வாகம் சம்பந்தமாக விடுதலைப்புலிகளால் முன்வைக்கப்பட்ட யோசனைகளை அரசு ஏற்றுக்கொள்வதற்குத் தயங்கியது. இந்த இடைக்கால நிர்வாகம் விடுதலைப்புலிகளுக்கு வழங்கினால் நாடு பிரிந்து செல்வதற்கு இடமுண்டு என இன்றைய ஆட்சியாளர்கள் நினைத்தனர். ஆனால் இன்று அப்படி நினைக்கத்தேவையில்லை. இன்று இடைக்கால நிர்வாகம் விடுதலைப்புலிகளுக்கு வழங்கினாலும் அதை அவர்கள் வேறு விதமாகப் பயன்படுத்தமாட்டார்கள். ஏனென்றால் சர்வதேச சமூகம் இன்று விடுதலைப்புலிகளைச் சந்தேகக் கண்களால் பார்க்கவில்லை. சுனாமிப் பேரலைகளின் செயற்பாடுகளின்றல் விடுதலைப்புலிகளின் செயற்பாடுகள் யாவும் உலக அரங்கின் அனுதாபத்தையும் நன் மதிப்பையும் பெற்றுள்ளது.



தற்பொழுது ஏற்பட்டுள்ள மாற்றத்தாலும், சூழ்நிலையாலும் இடைக்கால நிர்வாகம் விடுதலைப்புலிகளுக்குக் கிடைக்கும் பட்சத்தில் அவர்கள் மேலும் வலுவடைவார்கள். அது இராணுவ ரீதியான வளர்ச்சி அல்ல, அரசியல் ரீதியான வளர்ச்சியாகும். உண்மையில் சிறிலங்கா அரசு இதய சுத்தியாகச் செயற்பட்டால் விடுதலைப்புலிகள் பிரிந்து செல்ல மாட்டார்கள் அரசுடன் இணைந்து கொள்வார்கள். இன்று அரசாங்கத்தின் செயற்பாடுகளை நாங்கள் நோக்குவோமானால் இரண்டு கொள்கைகளை அரசு கடைப்பிடிக்கின்றது. ஒன்று தற்பொழுது விடுதலைப்புலிகள் முகம் கொடுத்துள்ள பிரச்சினைகளை முன்வைத்து அவர்களை அரசியல் ரீதியில் பலவீனப்படுத்துவது அல்லது விடுதலைப்புலிகளுடன் பேச்சு வார்த்தைகளை நடத்தி பிரச்சினைகளுக்கு சுமுகமாகத் தீர்வு காண்பது. உலகில் இப்படியான சம்பவங்கள் பல நடந்துள்ள தென்பதைச் சரித்திரம் கூறுகின்றது. 1962ஆம் ஆண்டு கியூபா நாட்டில் அணுவாயுதம் பாவிப்புச் சம்பந்தமாக ஏற்பட்ட கருத்து வேறுபாட்டினால் அன்று சோவியத் நாடு கியூபா நாட்டில் இரசாயன ஆயுதங்களைப் பாவிப்பதற்கு அனுமதி தந்ததுடன் இதனை எதிர்த்த சோவியத் நாடு இரண்டு அறிவித்தல்களை அமெரிக்க நாட்டுக்கு அனுப்பியது. ஒன்று அமெரிக்கக் கடற்படையை கியூபா நாட்டிலிருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தால் நாங்கள் கியூபா நாட்டில் இருக்கும் அணுவாயுதத்தை மீளப் பெற்றுக்கொள்வோம். அப்படி அமெரிக்கா செய்யத்தவறினால் கியூபா நாட்டில் நிலைகொண்டிருக்கும் அமெரிக்கக் கடற்படைகளின் மீது தாக்குதல் நடத்துவோம். ஆனால் அமெரிக்கா அதற்கு இலகுவான பதிலையே சோவியத் நாட்டிற்கு அறிவித்தது. உதாரணமாக இச்சம்பவத்தை யோன் கல்ரூன் கொழும்பு செய்தியாளர் மத்தியில் கூறினார். விடுதலைப்புலிகள் அரசுக்கு அனுப்பும் செய்திகளும் பாரதூரமானவைகள் என்று அரசு தனது கவனத்திற்கு எடுத்துக் கொள்ளாத படியால் இதன் விளைவுகள் பாரதூரமாக அரசுக்கு அமையலாம். விடுதலைப்புலிகள் அரசுக்கு அறிவிக்கும் விடயங்களை அரசின் மேல் மட்டங்கள் கவனத்திற்கு எடுத்துக கொள்வதில்லை. சில நன்மையான விடயங்களையும் அரசு புறக் கணித்துக்கொண்டு வருகின்றது.

சுனாமி அனர்த்தங்களுக்குப்பின் சகல யோசனைகள் திட்டங்கள் யாவையும் சனாதிபதி தற்பொழுது மேற்கொண்டு வருகின்றார். சகல அமைப்புக்களைக் கொண்ட குழுக்களையும் சனாதிபதி சுனாமி அனர்த்த சங்கத்துக்கு நியமிக்கின்றார். இதை சனாதிபதி ஏனைய கட்சிகளுடன் கலந்தாலோசிப்பதில்லை. தன்னிச்சைப்படி இவைகளை நடத்திக்கொண்டு வருகின்றார். இப்படிப்பட்ட சர்வாதி கார நோக்கங்களைக் கொண்ட சனாதிபதி விடுதலைப்புலிகளுடன் எத்தகைய நிலைப் பாட்டைக் கடைப்பிடிப்பார். இதையே கடந்த கால ஆட்சியாளர்களும் கடைப்பிடித்து வந்திருக்கின்றனர்.

சுனாமி அனர்த்தங்களிற்குப் பின்னர் வடகிழக்கு மக்களுக்கு நிவாரணப்பணிகளைச் செய்யும் பொழுது விடுதலைப் புலிளின் பங்களிப்பு அரசுக்கு அத்தியாவசியமாகத் தேவைப்படுகின்றது. இதற்கு அவாகளுடன் முதலில் கலந்தாலோசிக்க வேண்டும் இதில் அரசு தனது அதிகாரத்தைப் பயனபடுத்தலாகாது விடுதலைப் புலிகளையும் மனிதர்களாகவே கருதவேண்டும்.

வடகிழக்கில் ஏற்படும் பிரச்சினைகளுக்கு அரசு விடுதலைப்புலிகளை நிச்சயமாக இணைத்துக் கொள்ளவேண்டும். ஆனால் எமது அரசியல் தலைவர்கள் இதை உணர்ந்து கொள்ளாதபடியால் மேலும் இந் நாட்டில் பிரச்சினைகள் வலுவடைகின்றது.

# கோதுமை மாவுக்கு வழங்கும் மானியத்தை விலக்குவது குறித்து அரசு ஆராய்வு

## – அமைச்சர் அநுரா திஸ்ஸ நாயக்க தகவல்

கோதுமை மாவிற்கு இதுவரை வழங்கப்பட்ட மானியத்தை விலக்கிக் கொள்வதில் அரசாங்கக் கவனம் திரும்பியுள்ளதாக விவசாய அமைச்சர் அநுராதிஸ்ஸநாயக்க தெரிவித்துள்ளார். அநுராதபுர மாவட்ட செயலாளர் அலுவலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலின்போது இந்தக்கருத்தைத் தெரிவித்த அவர், தற்போது ஒரு கிலோ கோதுமை மாவிற்கு 7 ரூபா மானியம் வழங்கப்படுவதாகவும் நுகர்வோருக்காக அரசாங்கம் இந்தத் தொகையினை பிறீமா நிறுவனத்திற்கு செலுத்துவதாகவும் தெரிவித்துள்ளார். மாவை உணவாகப் பயன்படுத்துவதற்கு அரசு மானியம் வழங்கக்கூடாது என்றும் ஆனாலும் மலையகத்தில் வாழும் மக்களுக்கு மாற்றுத் திட்டம் ஒன்று அறிமுகம் செய்யப்படவேண்டும் என்றும் இது தொடர்பாக அரசின் கவனம் திரும்பியிருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார். தற்போது சந்தையில் 27 ரூபாவுக்கு விற்கப்படும் 1 கிலோ கோதுமை மா பிறீமா நிறுவனத்திடம் 34 ரூபாவுக்கே கொள்வனவு செய்யப்படுவதாக அமைச்சர் சுட்டிக்காட்டினார். (32)

# துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் பலி

கொஸ்கொட வெலங்கொட பிரதேசத்தில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார். நேற்றிரவு இடம்பெற்ற இந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் காயமடைந்த ஒருவர் கறாப்பிட்டிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இந்தத் தாக்குதலை 6 பேரைக் கொண்ட குழுவே நடத்தியுள்ளதாகக் காவல்துறையினர் தெரிவித்துள்ளனர்.

# ரோகித போகல்லாகமவை கட்சியை விட்டு நீக்கியது தவறு

## -நீதிமன்றம் தீர்ப்பு

ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் உயர் தொழில்நுட்ப பொருளாதார அபிவிருத்தி அமைச்சருமான ரோகித போகல்லாகமவை ஐக்கிய தேசியக்கட்சி அங்கத்துவத்தில் இருந்து விலக்கியமை சட்ட விரோதமானது என உயர் நீதிமன்றம் நேற்று முன் தினம் தீர்ப்பளித்துள்ளது. ஐக்கிய தேசியக்கட்சி தன்னை கட்சி அங்கத்துவத்தில் இருந்து விலக்கியமையை எதிர்த்து அமைச்சர் நீதிமன்றில் செய்யும் முறைப்பாட்டை விசாரித்த நீதிமன்றம் மேற்கண்டதீர்ப்பை வழங்கியுள்ளது. (32)

# ஜே.வி.பி. அமைச்சரின் செயலாளர் சந்திரிகாவினால் திடீர் மாற்றம்

மீன்பிடி நீரியல்வள அமைச்சின் செயலாளர் பதவியில் இருந்த நந்தசேன பம்பலவாணகே என்பவரை நீக்கிவிட்டு எஸ். ஜினதாஸ என்பவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பான கடிதத்தை அமைச்சின் முன்னாள் செயலாளரான பம்பலவாணகே நேற்று முன்தினம் பெற்றுள்ள அதே வேளை, இந்தத் திடீர் பதவி மாற்றத்திற்கான காரணம் இதுவரை தெரியவரவில்லை.

இதேவேளை நீரியல் மீன்பிடி அமைச்சர் சந்திரசேன விஜயசிங்க ஜே.வி.பி யின் உறுப்பினர் என்பது குறிப்பிடத்தக்கது. இந்த அமைச்சின் செயலாளர் பதவி மாற்றமானது ஆளும் கட்சிக்குள் உள்ள கருத்து வேறுபாட்டினால் ஏற்பட்டதா என ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

## ஆழிப்பேரலைகள் முல்லையில் நடத்திய கோரத்தாண்டவம்

# சிறுவர்களின் சடலங்கள் ஒவ்வொன்றும் ஆயிரம் கதைகள் சொல்லியபடி கிடந்தன

**சுனாமிப் பேரலைகளின் கோரத்தாண்டவத்தில் சிக்கி பெரும் அழிவைச் சந்தித்திருந்த முல்லை நகரில் மேற்கொள்ளப்பட்ட மீட்பு நடவடிக்கை பற்றியும் அதன் போது ஏற்பட்ட சகித்துக் கொள்ள முடியாத துயரமான அனுபவங்களை தமிழீழ கடற்படை மகளிர் பிரிவுப் போராளி வைதேகி பகிர்ந்து கொள்கிறார்.**

அ.லோகீசன்

பகுதி -26

**என்னைக்** கண்டதும் "அக்கா என்ன நடந்தது எண்டே தெரியாது முதல் பெரிய அலை ஒண்டு வந்து என்னைத் தூக்கிக் கொண்டு போய்கிணத்துக்க போட்டுட்டுது. அதுக்குப் பிறகு நான் எப்பிடி மேல வந்தன் எண்டுறதே எனக்குத் தெரியாது. ஏதோ மேல வந்திட்டன் எங்கட மற்றப் போராளியள் எப்பிடி எண்டுறது தெரியாது" எண்டு கூறிமுடித்தார்.

இந்தப் பிள்ளையை கண்டதும் மற்றப் பிள்ளையளும் இப்பிடித்தான் தப்பி இருப் பார்கள் என்று நினைத்தேன். கோயில் குடியிருப்பில் இருந்த இந்தப் பிள்ளையை கச்சேரிக்குப் பின்னால் உள்ள சின்னாத்துக் கரையில் தான் மிதத்தி இருந்தது. தண்ணியுடன் அடிபட்டு வந்ததால அந்தப் பிள்ளையின்ர உடுப்பு கிழிந்து போய் இருந்தது. அதைவிட கனக்கக் காயங்கள் வந்து உடல் முழுக்க இரத்தம் வழிந்து கொண்டிருந்தது.

உடனடியாக இந்தப் பிள்ளையை வைத்தியசாலைக்கு அனுப்பவெளிக்கிட எங்கட மற்றப் பிள்ளையளும் அங்கால நிண்டு நிண்டு வந்து கொண்டிருந்தினம். அவையளும் வைத்தியசாலைக்குப் போக வேண்டிய ஆக்கள் தான். ஆனால், தாங் கள் போகமாட்டம். இஞ்சநிண்டு மீட்புப் பணி செய்யப்போறம் எண்டு சொல்லி விளையாட்டு மைதானத்துக்கு முன்னால் றோட்டால் பாஞ்ச தண்ணீக்குள்ளால ஆக் களை முள்ளியவளைப் பக்கம் அனுப்பிக் கொண்டிருந்திச்சினம்.

அந்த வேலைய அவயளிட்ட விட்டுட்டு நிக்க செந்தளிர் சிறுவர் இல்லத்தில இருந்த சின்னப்பிள்ளையள் கனக்கப் பேரை தண்ணி குடிச்சு ஊதினபடி கொண்டுவந்து அடுக்கிக்கொண்டிருந்தினம். அவையள்ள கனக்கப்பேர் மயங்கினபடி யும், அரை உயிரிலயும் சிலர் செத்தும் போயிருந்தார்கள். அந்த இடத்தில் முல்லைத்தீவு வைத்தியசாலை வைத்தியர் ஒருவராய் இருக்கவேணும் எங்களிட்ட "இந்தப் பிள்ளையளின்ர கால்லபிடிச்சு சுத்துங்கோ அப்பதான் அவையள் குடிச்ச தண்ணி வெளியால வரும்" எண்டு சொன் னார்.

அந்த இடத்தில இந்த வேலையைச் செய்யிறதுக்கே ஒருத்தரும் இல்லை. எல்லாரும் தண்ணீல அடிபட்டுப் போய் வந்திருந்தவ. அது மட்டுமில்லாமல் அவை யள் தங்கண்ட உறவுகளைத் தேடி அழுது கொண்டு நிக்கினம். இப்பிடி இருக்கேக்க அவையால அதைச்செய்ய ஏலாது. அப்ப நான் அந்தப்பிள்ளையளின்ர கால்லபிடிச்சு சுத்திக்கொண்டிருந்தன். ஒரு கட்டத்தில என்னால ஏலாமல் இருந்தது. தலை சுற்றியது. ஒரு பிள்ளையை சுத்துறத்துக் காக தூக்கப்போக அந்தப் பிள்ளையின்ர உடம்பெல்லாம் மஞ்சள் அடிச்சுக் கொண்டி ருந்தது. எதுக்கும் சுத்திப் பார்ப்பம் சில நேரம் தப்பினாலும் எண்டு நினைச்சுக் கொண்டு கால்ல பிடிச்சு சுத்த அந்தப் பிள்ளையின்ரவாயாலையும் மூக்காலையும் நுரையும், இரத்தமும் பறந்து என்ர உடுப்பெல்லாம் பட்டுவிட்டது. ஆனாலும் அந்தப்பிள்ளை தப்பவில்லை. இப்பிடி அந்தப் பிள்ளையள் கன பேரை சுத்திப் பாத்தும் தப்பினது ஒரு கொஞ்சப்பேர்தான்.

இப்பிடியே அதமுடிச்சுக் கொண்டு காயப்பட்டு கிடக்கிற ஆக்களை மீட்பம் எண்டு நாங்கள் ஊருக்குள்ள போனம். அங்க போக எங்கண்ட சிறப்புத் தளபதி சூசை அண்ணா நிண்டு ஆக்களை பிரிச்சுப் பிரிச்சு ஒவ்வொரு இடமா அனுப்பிக் கொண்டிருந்தார்.

எங்களுக்கும் இடம் பிரிச்சுத் தரப்பட் டது. அப்பிடியே சூசை அண்ணாவோட நடந்து போய்க்கொண்டிருக்கேக்க மணல் குடியிருப்பில ஒரு கட்டிட இடிபாட்டுக்குள் ளால ரண்டு கால் மட்டும் தெரிஞ்சுது. அந்தக் கால்களில் உயிர்த்துடிப்பு தெரிந் தது. உடனடியாகவே கட்டிட இடிபாடு களை அகற்றிப்போட்டுப் பாத்தால் அது ஒரு பொம்பிளை ஆளின்ர உடல் அவர் கர்ப்பிணித் தாய் என்பது தெரிந்தது. உடன்டி யாக அவரை அந்த இடத்தில் இருந்து வெளியால எடுத்தம். அவா மயங்கினபடி கிடந்தா. இவாவக் காப்பாற்ற வேணும். காப்பாற்றினமெண்டால் ரண்டு உயிரைக் காப்பாற்றிப்போடுவம் எண்டுற உணர்வில அவாவ தூக்கிக் கொண்டு வந்து தமிழீழ மருத்துவப் பிரிவிட்ட குடுத்துட்டு நாங்கள் தொடர்ந்து எங்கட பணியத் தொடங்கினம்.

நாங்கள் காயப்பட்டவர்களை மீட்டது. எண்டுறது மிகக்குறைவு. உயிரில் லாத உடல்களைத் தான் நிறைய எடுத் தோம். அப்பிடி எடுத்த உடல்கள் ஒன்றி லுமே உடுப்பு எதுவும் இருக்கவில்லை. முள்ளுக்கம்பிக்குள்ள சிக்குப்பட்டு கிழிபட் டது எண்டுறது ஒரு பக்கம் அலையின்ர வேகத்திலயே எல்லாற்றை உடுப்பையும் கிழிச்சிருக்கு. ஏற்கனவே நாங்கள் பல தடவை கண்டு பழகியவர்களின் உடல் களைக்கூட அந்த நிலையில் எங்களால் அடையாளப்படுத்த முடியாமல் இருந்தது. இது உண்மை.

பெண் பிள்ளைகளின் வெற்றுடல்களை தூக்கின அளவுக்கு ஒரு பிள்ளையின்ர தலை முடிகூட பின்னப்பட்ட நிலையில் இல்லை. எல்லாரது முடியும் குலைஞ்சு போன நிலையில் கஞ்சல்கள் எல்லாம் சிக்கி இருந்தது. அதைவிட ஒருவிதமான பாசிப்படலம் எல்லாரது தலை முடிக்குள் ளும் இருந்தது.

தண்ணீருக்குள் சிக்குப்பட்டு உயிர் தப்பியவர்களில் பெருமளவானவர்கள் கைகால்கள் முறிவடைந்த நிலையிலும் மூட்டுக்கள் களன்று போன நிலையிலும் தான் இருந்தனர். கடல் தண்ணி வேகமாக சுழன்று அடித்துக் கொண்டிருந்ததால் அவர்களின் எலும்புகளும் மூட்டுக்களும் கழன்றிருக்கலாம்.

அன்றையதினமே பெருமளவரீன உடல்கள் அகற்றப்பட்டுவிட்டன. அவ்வாறு அகற்றப்பட்ட உடல்கள் எல்லாம் முல்லைத் தீவு றவுண்டப் போட் அடியிலகொண்டு வந்து வைக்கப்பட்டிருந்தது. அதிலிருந்து உழவு இயந்திரங்களில் ஏற்றி சடலங்களை வெளி இடங்களுக்கு அனுப்பிக் கொண் டிருந்தோம்.

இந்த இடத்தில் எங்களுக்கு பெரும் வேதனையாக இருந்தது. எங்களைக் காத்து வளர்த்த உறவுகள் உயிரிழந்து போய் இப்பிடி சடலமாய் கிடப்பதைப் பார்க்க முடியாமல் இருந்தது. ஒவ்வொரு உடல்களும் அலங்கோலமாக இருந்தன. எப்பிடியும் இவற்றை ஏற்றி அனுப்ப வேண்டும் என்ற துடிப்பில நிறைந்து போய் இருந்த சடலங் களை ஒவ்வொன்றாய் உழவு இயந்திரங் களில் தூக்கி ஏற்றிக் கொண்டிருந்தோம்.

ஒவ்வொரு உழவு இயந்திரங்களிலும் பதினேழுக்கும் அதிகமான சடலங்களை ஏற்றினோம். எங்கள் உறவுகளின் சடலங் களை நூறு, நூற்றி ஐம்பது என்று எண்ணி எண்ணி ஏற்றிக் கொண்டிருந்தோம். ஒரு கட்டத்தில் சடலங்கள் குவிந்து போய்விட் டது. அந்தக் குவியலைப் பார்க்க பயமாய் இருந்தது. இத்தனை பேர் செத்துவிட்டார் களா? என்ற பீதியான உணர்வு நெஞ்சை உலுப்பியது. சடலங்களை ஏற்றி ஏற்றி என்னால இனி தூக்க முடியாது என்கிற கட்டத்துக்குப் போய்விட்டேன். ஒவ்வொரு சடலமும் சரியான பாரமாக இருந்தது.

இதற்கு முன்னுக்கு வண்ணாங்குளம் பக்கம் நாங்கள் மீட்புப் பணி செய்து கொண்டு போய்க்கொண்டிருக்க ஒரு பனை வடலி யில ஏதோ ஒரு உடுப்புக் கிடக்கிற மாதிரி இருந்தது. எதுக்கும் அதை வடிவாய்ப் பாப்பம் எண்டுட்டு கிட்டப் போய்ப் பார்த் தால் ஒரு செக் சேட் போட்டபடி ஒரு அண்ணா ஒருத்தர் வடலியில சிக்குப் பட்டுத் தொங் கிக் கொண்டிருந்தார். கஞ்சலால் மூடுப் பட்டிருந்த அவற்றை முகத்த வடிவாய்ப் பாத்தம். உயிர் இருக்கிற மாதிரியும் தெரிந் தது.உடனகஞ்சலுகளத் துட்டினம் அவற்றை கண் இரண்டையும் காணேல்ல. கண் ஓட்டை ரண்டுக்குள்ளயும் கஞ்சல்கள் போய் அடைஞ்சு கிடந்தது. கண் விழி ரண்டும் ஒரு சின்ன நரம்பில தொங்கிக் கொண்டிருந்தது. அவர் இறந்து போய்த்தான் இருந்தார். இப்பிடிக் கோரத்தை நாங்கள் இதுக்கு முன்னுக்கு ஒருக்காலுமே காணேல்ல. இப்பிடி மரங்கள் எல்லாத்திலையும் சடலங்கள் தொங்கியபடி இருந்தன.

இருபத்தி ஆறாம் திகதி நாங்கள் முல் லைத்தீவில எங்க நடந்தாலும் ஒரே சடலங்கள் தான். சடலக்காட்டுக்குள்ள தான் நாங்கள் நடந்து கொண்டிருந்தம். சில இடங்களில முள்ளுக்கம்பியக் கூட சிலர் இறுக்கிக்கட்டிப் பிடிச்சபடி செத்துக்கிடந்தினம். சின்னப்பிள்ளையளின்ர சடலங்களைப் பார்க்க பாிதாபமாக இருந்தது. ஒவ் வொருத்தற்ற முகத்திலயும் ஒவ்வொரு தவிப்புத் தெரிந்தது. அவர்கள் தண்ணி யுடன் அடிபட்டுப் போகேக்க யாராவது தங்களைத் தூக்குவார்கள் என்ற உணர் வுடன் கைகளை மெதுவாகத் தூக்கியபடி இறந்து போய் இருந்தார்கள். அவர்களின் முகங்கள் ஒவ்வொன்றும் ஆயிரம் கதை கள் சொல்லிக்கொண்டிருந்தன. சின்னப் பிள்ளைகளின் சடலங்களைத் தூக்கப் போகின்ற பொழுது அவர்களின் முகத்தை யும், கையை வைத்திருக்கின்ற தன்மை யையும் பார்த்தால் உயிருடன் இருக்கிறார் கள் போலத்தான் தெரிந்தது. அவர்களின் உடல்களைப் பார்க்க மனம் வெதும்பியது.



இப்பிடியே முதல் நாள் எங்களுடன் கதைத்தவர்கள் அன்று காலை பார்த்துச் சிரித்தவர்கள் எவரும் உயிருடன் இல்லை. அழகாக உயர்ந்து கொண்டிருந்த முல் லைத்தீவை சில விநாடிகளில் தரைமட்ட மாக்கி சுடுகாடாக்கிவிட்டது இந்தக் கடல். இப்பிடியே நான்கு நாட்கள் அந்தப் பகுதி முழுவதும் மீட்பு நடவடிக்கைகளில் தொடர்ச்சியாக ஈடுபட்டோம். என்றும் மறந்து விட முடியாத சம்பவமாக இந்த துயரச்சம்பவம் நெஞ்சில் பதிந்து விட்டது.என்று தனது மீட்பு அனுபவத்தை சொல்லி முடித்தார்.



கடல் பேரனர்த்தம் இடம் பெற்ற சில நிமிடங்களில் கள்ளப்பாட்டு கிராமசேவகர் தனது கிராமத்துக்கு விரைந்து சென்றி ருந்தார். அவர் தண்ணீருற்றிலுள்ள தனது வீட்டில் இருந்து சென்றபோது அங்கு கண்டவை என்ன? அவரது கிராமம் எப்படி இருந்தது? என்பதை அடுத்த பகுதியில் தருகிறோம்.

தொடரும்

# தமிழர் பிரதேசத்தில் தமிழ்த் தேசியக் கொடி ஏற்றுவதில் எவ்வித தவறும் இருக்க முடியாது

## மன்னார் ஆயர் அதி.வண.இராஜப்பு ஜோசப்

(மன்னார்)

புலிக்கொடி தமிழர்களின் தேசியக் கொடி தமிழர் பிரதேசங்களில் இந்தத் தமிழ்த் தேசியக் கொடியை ஏற்றுவதில் எந்தத் தவறும் இருக்க முடியாது என மன்னார் கத்தோலிக்க ஆயர்அதி. வண. இராஜப்பு ஜோசப் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் மன்னார் நகரில் நடைபெற்ற மட்டு - அம்பாறை அரசியல் துறைப் பொறுப்பாளர் கௌசல்யன் உள்ளிட்ட விடுதலைப்புலி உறுப்பினர்களினதும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சந்திரநேரு ஆகியோரின் கொலைகளைக் கண்டித்தும், மன்னாரில் மாணவன் ஒருவன் பாலியல் துன்புறுத்தலுக்குள்ளானதையும் கண்டித்தும் நடைபெற்ற கூட்டத்தில் உரையாற்றும் போதே ஆயர் இவ்வாறு தெரிவித்தார்.

தமிழர் பிரதேசத்தில் தமிழர்களின் கொடியை ஏற்றுவதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் அனேகமானோர் மேற்படி கொலைகள் தொடர்பில் மௌனம் சாதிக்கின்றனர் என்றும் ஆயர் தமது உரையில் குற்றம் சாட்டினார்.

மன்னார் மாவட்ட அரச சார்பற்ற பொது அமைப்புக்களின் ஒன்றியம் ஆர்ப்பாட்ட பேரணியையும் கண்டனக் கூட்டத்தையும் ஏற்பாடு செய்தது இதில் பல்லாயிரக்கணக்கானோர் கலந்து கொண்டனர். கண்டனக்கூட்டம் மன்னார் பேருந்து நிலையத்தில் நடைபெற் றது.

தொடர்ந்து கருத்துத் தெரிவித்த ஆயர் இவ்வாறான பல வன்முறைகள் நடைபெற்றாலும் சமாதானத்துக்காக புலிகள் பொறுமையைக் கடைப்பிடிப்பதை பாராட்ட வேண்டும். கடந்த ஆண்டில் நடைபெற்ற மாவீரர் தின நிகழ்வின் போதும் மன்னாரில் தேசியக் கொடியேற்றி அமைதியாக மாவீரர் நாள் அனுஷ்டிக்கப்பட்ட போதும் சிறிலங்கா இராணுவம் கனரக ஆயுதங்களுடன் வந்து பொதுமக்களைத் தாக்கி பலரைக் காயப் படுத்தினர். ஒருசிலர் பலியாகினர் என தெரிவித்தார்.

நிகழ்வில் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான வினோநோகராதலிங்கம், சிவநாதன் கிஷோர், சிவசக்தி ஆனந்தன் ஆகியோரும் கலந்து உரை நிகழ்த்தினர்.


## கனரக வாகன ஓட்டுனர் பயிற்சி நெறி 38A முறைசாராக்கல்வி – 2005

கிளி/கல்வி வலயத்தின் முறைசாராக்கல்விப் பிரிவு நடைமுறைப்படுத்தும் மேற்படி பயிற்சி நெறி 01.03.2005 ஆரம்பமாக உள்ளதால் பயிற்சிக்கு விண்ணப்பிக்க விரும்புபவர்கள் 25.02.2005 இற்கு முன்னர் பெயர்களைப் பதிவு செய்து கொள்ளவும்.

ஆரம்ப ஒன்று கூடல் நிகழ்வு 27.02.2005 ஞாயிறு மாலை 4.00 மணி கிளி/மத்திய கல்லூரி.

*R.Raiamahenthiran*
*Principal*
*Kilinochchi Central College*
*Kilinochchi.*

(சி.11335)



## சந்தோசம் அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு

*சமுதாய முன்னேற்ற நிலையத்தினரால் நடாத்தப்பட்ட சந்தோசம் அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு 15.02.2005 அன்று மாலை புதுக்குடியிருப்பு பொதுச் சந்தையில் அதிர்ஷ்டம் பார்க்கப்பட்டது. இதில் வெற்றி பெற்ற இலங்கங்கள்* **பின்வருமாறு உள்ளது.**

| | |
|---|---|
| 1 ஆம் பரிசுபெற்ற இலக்கம் | - 16184 |
| 2 ஆம் பரிசு பெற்ற இலக்கம் | - 4420 |
| 3 ஆம் பரிசு பெற்ற இலக்கம் | - 3003 |

ஆறுதல் பரிசு இலக்கங்கள்

| | |
|---|---|
| 01) 23020 | 06) 6102 |
| 02) 13833 | 07) 12662 |
| 03) 1935 | 08) 23970 |
| 04) 22152 | 09) 20956 |
| 05) 7060 | 10) 17664 |

**அதிர்ஷ்டசாலிகள் எமது மேற்படி முகவரியில் அமைந்துள்ள செயலகத்தில் தொடர்பு கொண்டு பரிசில்களைப் பெற்றுக் கொள்ளுமாறு வேண்டப்படுகிறார்கள்**

"நன்றி"

**நிர்வாகம்,**
**சமுதாய முன்னேற்ற நிலையம்,**
**தல்லமைச் செயலகம்,**
**ஜெயந்திநகர்,**
**கிளிநொச்சி.**

(5483)


## மாங்குளம் – முல்லை வீதி புனரமைப்பு

(ஒட்டுசுட்டான்)

மாங்குளம்-முல்லை வீதியானது (A/34) யுத்த நிறுத்தத்தின் பின்பு கிரவல் போட்டு திருத்தப்பட்டு வருகிறது.

கடந்த ஆண்டு மழையினால் பாதிக்கப்பட்ட இவ்வீதியினை கிரவல் போட்டு தார் ஊற்றும் வேலைத்திட்டம் கடந்த மாதம் ஆரம்பிக்கப்பட்டு ஒலுமடுப் பகுதியை அண்மித்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (05)


## பதவி வெற்றிடம்

**யாழ்ப்பாணத்தில் இயங்கும் பிரபல காப்புறுதி நிறுவனம் தனது சேவையை விரிவுபடுத்தும் முகமாக முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு, மல்லாவி, மாங்குளம், விசுவமடு, வட்டக்கச்சி, முழங்காவில், பூநகரி, பரந்தன், கிளிநொச்சி ஆகிய இடங்களில் உள்ளவர்களுக்கு முன்னுரிமை அளிக்கும் முகமாக விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன.**

தகுதி அடிப்படையில் வேலை வாய்ப்பு வழங்கப்படும்

வயது வந்தவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்

ஆண், பெண் இருபாலரும் விண்ணப்பிக்கலாம்

விண்ணப்ப முடிவுத் திகதி 22.02.2005

*அனுப்பவேண்டிய முகவரி*
*இளங்கோ பல்பொருள் வாணிபம்.*
*கரடிப் போக்கு,*
*கிளிநொச்சி.*
T.P *021-228 5748*

(சி.11341)



## வாடகைக் கார் உரிமையாளர் கழகம் – வன்னி –

### பொதுச் சபைக் கூட்டம்

வாடகைக் கார் உரிமையாளர் கழகத்தின் பொதுச் சபைக் கூட்டம் எதிர்வரும் 20.02.2005 ஆம் நாள் ஞாயிறு காலை 1000 மணிக்கு கிளிநொச்சி மத்தியகல்லூரி மண்டபத்தில் நடைபெறும். உறுப்புரிமை பெற்றுள்ள உரிமையாளர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

நன்றி

**நிகழ்ச்சி நிரல்**

- அகவணக்கம்
- தலைவர் உரை
- செயலாளர் சென்ற கூட்டஅறிக்கை வாசித்தல்
- கணக்காளர் கணக்கறிக்கை வாசித்தல்
- ஊர்திகளின் பணி தொடர்பாக ஆராய்தல்
- ஏனைய விடயங்கள்
- நன்றி உரை

**தேவதாஸன் ரூபன்,**
**(இராகுலன்),**
**தலைவர்.**

**தகவல்:-**
**கந்தையா நிர்மலன்,**
**செயலாளர்.**

(5689)



## மாபெரும் இயல விற்பனை

ஹொண்டா, ஹீரோஹொண்டா, யமஹா, சுசுக்கி, பஜாஜ் ஆகிய இனங்களைக் கொண்ட உந்துருளிகள் இயங்கும் நிலை, உதிரிகளாக்கும் நிலையில் விற்பனைக்கு விடப்படும்.

பார்வையிடும் நாள் :- 17.02.2005, 18-02-2005, 19.02.2005 வரை மட்டும்

இயலம் நடைபெறும் நாள் :- 22. 02.2005 காலை 09.மணிக்கு

இடம் :- உடைமைப் பகுதி ச் செயலகம், வேணாவில், புதுக்குடியிருப்பு.



*உந்துருளிக்கான கேள்வி கோரல் விண்ணப்பக் கட்டணம் 200/=*

*உதிரிகளுக்கான கேள்வி கோரல் விண்ணப்பக் கட்டணம் 500/=*



# சட்டசபைத் தேர்தல் முன்கூட்டியே நடைபெறலாம்

# சவால்களைச் சந்திக்க அனைவரும் தயாராகுங்கள்

## -அ.தி.மு.க வினருக்கு தமிழக முதல்வர் அழைப்பு



(சென்னை)

சட்டசபைக்கு முன் கூட்டி தேர்தல் வருவதால் தேர்தலைச் சந்திக்கத் தயாராகுங்கள் என்று பொதுக்குழுவில் பேசிய ஜெயலலிதா அ.தி.மு.கவினருக்கு உத்தரவு பிறப்பித்துள்ளார். அ.தி.மு.க செயற்குழு- பொதுக்குழுக் கூட்டம் நேற்று முன்தினம் சென்னை வடபழனி விஜய சேஷ மகால் திருமண மண்டபத்தில் நடைபெற்றது.

காலை 10 மணிக்கு ·முதல்வரும், அ.தி.மு.க. பொதுச் செயலாளருமான ஜெயலலிதா கூட்டத்திற்கு வந்தார். அவருடன் ஒரே காரில் தோழி சசிகலாவும் வந்தார். இதையடுத்து கூட்டம் தொடங்கியது. அவைத்தலைவர் பொன்னையன் தலைமை வகித்தார்.


ஜெயலலிதா இந்தக் கூட்டத்தில் யார்,யார் பேச வேண்டும் என்று குறிப்பு எழுதிக்கொடுத்தார். அதன்படி ஓ.பன்னீர்ச்செல்வம், பொன்னையன், திண்டுக்கல் சீனிவாசன், பா.வளர்மதி, எஸ்.டி.கே.ஜக்கையன், கோ.கலிவரதன், சட்டவாளர் ஜோதி, டி.ஜெயக்குமார், பெரம்பலூர் ராஜரத்தினம் ஆகியோர் பேசினார்கள்.

எல்லோரும் பேசி முடித்த பிறகு கடைசியாக பகல் 1 மணிக்கு ஜெயலலிதா பேச்சைத் தொடங்கினார். அவர் கூறியதாவது; தமிழகத்தில் சட்டசபை தேர்தலோடு சேர்ந்து பாராளுமன்றத் தேர்தலும் நடக்கக் கூடிய நிலைமை உருவாகி வருகிறது. எனவே இரு தேர்தலையும் சந்திக்கின்ற வகையில் நம் கட்சியினர் இப்போதே தயாராகிக் கொள்ள வேண்டும். ஆங்காங்கே உள்ள மக்கள் பிரச்சினைகளைத் தீர்த்து வைத்து அதன்மூலம் பொதுமக்களிடம் அ.தி.மு.க.வினர் நல்ல பேர்வாங்க வேண்டும். அத்தோடு நம் கட்சியினர் தங்களுக்கிடையே இருக்கின்ற விரோதங்களை மறந்து ஒற்றுமை உணர்வோடு தேர்தலுக்கான ஆயத்தப் பணிகளில் ஈடுபட வேண்டும்.

வரப்போகிற தேர்தல் நமகுச் சவாலாக இருக்கக் கூடும்.எனவேஅதைச்சந்திக்கஅ.தி.மு.க.வினர் சில தியாகங்களைச் செய்தாக வேண்டும். மீண்டும் ஆட்சிக்கு வருவதற்கு கட்சியினர் கடுமையாக உழைத்து வெற்றியை உறுதி செய்து வைத்துக்கொள்ள வேண்டும். கட்சியில் எந்தப் பதவியும் பெறாமல் பலர் இருக்கக்கூடும். அவர்கள் மனம் உடைந்து போகக் கூடாது. சில பதவிகளை நம்கட்சிக்கு ஒரு காலத்தில் துரோகம் செய்தவர்கள் இப்போது அனுப வித்துக்கொண்டு இருக்கலாம். அந்தத்தவறு முழுவது மாகக் களையப்படும். எனவே இதைப்பற்றி எல்லாம் நீங்கள் கவலைப்படவேண்டியது இல்லை. நானே அதைப்பார்த்துக்கொள்கின்றேன்.

நம்முடைய அரசின் சாதனைகளை எல்லாம் நீங்கள் மக்களிடம் எடுத்துச்சொல்லி வாக்குகளை நம் பக்கம் திருப்பவேண்டும். அப்படிச் செய்தால் தேர்தலில் அறுதிப் பெரும்பான்மை பெற்று மீண்டும் நாம் ஆட்சிக்கு வர முடியும்.

இந்தப்பொதுக்குழுவில் நிறைவேற்றப்பட்ட சில தீர்மானங்கள் வருமாறு; மின்னணு இயந்திரத்தின் மூலம் வாக்குப்பதிவு நடப்பது நம்பிக்கைக்கு உரியதாக இல்லை. எனவேஇனிவரும்தேர்தல்களில் முன்பு கடைப்பிடிக்கப்பட்ட முத்திரையிட்டு வாக்குச்சீட்டுமூலம் வாக்களிக்கும் முறையையே கொண்டு வரவேண்டும் என்று இந்தியத்தேர்தல் ஆணையத்தை இந்தப் பொதுக்குழு கேட்டுக்கொள்கிறது. வாக்காளர் பட்டியலில் நிறையப் போலி வாக்காளர்கள் சேர்க்கப்பட்ருக்கிறார்கள். எனவே தமிழகம் முழுவ தும் வாக்காளர் பட்டியல்களைத் திருத்தவேண்டும். தொகுதிகள் சீரமைப்புப் பணிகள் நடு நிலையுடன் நடத்தப்படவேண்டும் எதிர்க் கட்சிகளின் தலையீடுகளுக்குத் தேர்தல் ஆணையம் பணிந்து விடக்கூடாது. இது போன்ற தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. இதுவரை எந்தக்கட்சிப் பொதுக்குழுவிலும் நிறைவேற்றப்படாத மோசமான வார்த்தைகளுடன் எதிர்க்கட்சித்தலைவரைத்தாக்கி எழுதப்பட்ட தீர்மானமும் இந்த அ.தி.மு.க. பொதுக்குழுவில் நிறைவேற்றப்பட்டது. அதை அமைப்புச் செயலாளர் லியாகத் அலிகான் முன்மொழிந்து படித்தார். மற்றத் தீர்மானங்களுக்கு இருந்த அளவுக்கான கைத்தட்டல் இந்தத் தீர்மானத்துக்கு இல்லை. என்பது குறிப்பிடத்தக்கது. அ.தி.மு.க.வினரே முகம் சுளிக்கின்ற அளவுக்கு கடும் வார்த்தைகள் அந்தத் தீர்மானத்தில் பயன்படுத்தப்பட்டிருந்தன.



என்.எஸ்.சி.சார்பில் சுனாமி நிதியாக வழங்கப்பட்ட ரூ.2 கோடிக்கான காசோலையை பிரதமர் மன்மோகன்சிங்கிடம் மத்திய நிலக்கரி மற்றும் சுரங்கத்துறை இணை அமைச்சர் தாசரி நாராயணராவ் வழங்கிய போது எடுத்த படம் அருகில் நிலக்கரி துறை செயலர் பி.சி பராக், என்.எஸ்.சி அதிபர் எஸ்.ஜெயராமன் மற்றும் இந்திய நிலக்கரி நிறுவன அதிபர் (பொறுப்பு) சசிகுமார் ஆகியோர் உள்ளனர்.

-கடும் பனி பொழிவின் காரணமாக-

## காஷ்மீரில் ஒரு வாரம் தடைப்பட்டிருந்த மின்சார விநியோகம் சீரடைந்துள்ளது

காஷ்மீர் பகுதியில் கடந்த ஒரு வாரமாக தடைப்பட்டிருந்த மின்சாரம் திங்கட் கிழமை முதல் மீண்டும் கிடைக்கத் தொடங்கியுள்ளது.

காஷ்மீரில் தற்போது கடும் பனிப் பொழிவு காணப்படுகிறது. பனிஹால் பகுதியில் பாபாடாப் என்ற இடத்தில் செனானி மின்மாற்று நிலையம் அமைக்கப்பட்டுள்ளது காஷ்மீர் பள்ளத்தாக்கு பகுதிகள் அனைத்திற்கும் இங்கிருந்தே மின்சார விநியோகம் செய்யப்படுகிறது. இந்த மின்மாற்று நிலையத்தில் பனிப்பாறைகள் சரிந்து விழுந்ததால் பாதிப்பு ஏற்பட்டது. காஷ்மீர் பள்ளத்தாக்கு முழுவதும் மின்வசதி தடைப்பட்டு கடும் பனிகாரணமாக மின் நிலையத்தில் ஏற்பட்ட கோளாறை சரி செய்வதில் தாமதம் ஏற்பட்டது.

இந்நிலையில் செனானி மின்மாற்று நிலையத்தில் ஏற்பட்ட தொழில்நுட்பக் கோளாறை காஷ்மீர் மாநில மின்துறை அதிகாரிகள் திங்கட்கிழமை மாலை சரி செய்தனர் இதையடுத்து கடந்த ஒரு வாரமாகத் தடைப்பட்டிருந்த மின் வசதி மீண்டும் கிடைக்கத் தொடங்கியுள்ளது. மக்களுக்கு மீண்டும் மின்சாரம் கிடைக்க உதவிய மின்துறை அதிகாரிகளுக்கு முதல்வர் முப்தி முகமது சயீது பாராட்டுத் தெரிவித்துள்ளார்.

## சனவரியில் 77,743 கார்கள் விற்பனை

சனவரி மாதத்தில் மட்டும் இந்தியாவில் 77 ஆயிரத்து 743 கார்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

மோட்டார் சைக்கிள்கள் விற்பனை 4 இலட்சத்து 35 ஆயிரத்து 665 ஆகவுள்ளது. இது குறித்து இந்திய மோட்டார் வாகன தயாரிப்பாளர்கள் சங்கம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது, கார்கள் விற்பனையில் மாருதி நிறுவனம் முதலிடத்தில் உள்ளது. சனவரி மாதத்தில் மொத்தம் விற்பனையான 77 ஆயிரத்து 743 கார்களில் மாருதி நிறுவனத்தின் பங்கு 38 ஆயிரத்து 863 ஆகவுள்ளது. சனவரி மாதத்துடன் முடிவடைந்த 10 மாத காலத்தில் இந்தியாவில் மொத்தம் 6 இலட்சத்து 68 ஆயிரத்து 353 கார்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளன. இது 20.2 சதவீத வளர்ச்சியாகும். மோட்டார் சைக்கிள் விற்பனை சனவரி மாதத்தில் மட்டும் 23 சதவீதம் அதிகரித்து 435665 ஆகவுள்ளது. ஸ்கூட்டர் உள்ளிட்ட மற்ற வாகனங்கள் விற்பனை 70 ஆயிரத்து 490 ஆகவுள்ளது. குறைந்த விலை கவர்ச்சிகரமான வட்டி விகிதம் மற்றும் அதிக கிலோ மீற்றர்கள் பல்வேறு மொடல்கள் போன்றவை காரணமாக ஸ்கூட்டர் விற்பனை சரிந்து மோட்டார் சைக்கிள் விற்பனை பெரிதும் அதிகரித்துள்ளது.

# கோவா ஆட்சிக்கலைப்பை எதிர்த்து உச்ச நீதிமன்றில் முன்னாள் முதல்வர் வழக்கு

(புதுடில்லி)

கோவா ஆட்சிக்கலைப்பை எதிர்த்து உச்ச நீதிமன்றில் முன்னாள் முதலமைச்சர் மனோகர் பாரிக்கர் வழக்குத் தொடர்ந்துள்ளார்.

கோவா மாநிலத்தில் முதலமைச்சர் மனோகர் பாரிக்கர் தலைமையில் பாரதிய ஜனதாக் கூட்டணி ஆட்சி நடந்து வந்தது. பாரதிய ஜனதா 'எம்.எல்.ஏ.' க்கள் நான்கு பேர் ராஜிநாமா செய்ததைத் தொடர்ந்து அரசுக்கு நெருக்கடி ஏற்பட்டது. இதனால் கோவா சட்டசபையில் பலப்பரீட்சை இம் மாதம் 2 ஆம் திகதி நடந்தது. மனோகர் பாரிக்கர் அரசு ஒரு வாக்கு வித்தியாசத்தில் நம்பிக்கை வாக்கெடுப்பில் வெற்றி பெற்ற தாக சபாநாயகர் அறிவித்தார்.

இதை காங்கிரஸ் கூட்டணி கட்சித்தலைவர் பிரதாப்சிங் ரானே ஏற்றுக்கொள்ளவில்லை. இதனால் காங்கிரஸ் கூட்டணி 'எம்எல்ஏ'க்கள் ஆளுநர் மாளிகைக்குச் சென்று பாரதிய ஜனதா அரசைக் கலைக்கச் செய்ய வற்புறுத்தினார்கள்.

பாரிக்கர் தலைமையிலான பாரதிய ஜனதா அரசு தனது பெரும்பான்மையை நிரூபித்த போதிலும் ஆளுநர் ஜமீர் அதிரடியாக கோவா அரசைக் கலைத்தார். இதைத் தொடர்ந்து பிரதாப் சிங் ரானே தலைமையில் காங்கிரஸ் கூட்டணி அரசு நடந்து வருகிறது.

இந்த ஆட்சிக்கலைப்பு சட்ட முரணானது எனக் கூறியே தற்போது உச்சநீதிமன்றில் வழங்குத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது.


முு/விசுவமடு ப.நோ.கூ.சங்கம் (வ.து)

கிராமிய வங்கிக்கிளை புதிதாக ஆரம்பித்தல்

எமது சங்க தொழிற்பரப்பில் வசிக்கும் அங்கத்தவர்களினதும், பொது மக்களினதும் நலன்கருதியும், அவர்களின் சேமிப்புப் பழக்கத்தை அதிகரிக்கும் நோக்கோடு கிராமிய வங்கியில் தமது கணக்கில் கூடுதலான பணத்தை சேமம், வைப்புக்களாக வைத்திருக்கும் அங்கத்தவர்களுக்கு முதலீட்டு வசதியை ஏற்படுத்திக் கொடுக்கும் நோக்கோடு எதிர்காலத்தில் தொழில் முயற்சிக்கான கடன் திட்டங்களை அமுற்படுத்துவதற்கும் எமது சங்க தலைமைக் காரியாலயத்தில் கிராமிய வங்கிக்கிளை ஒன்று எதிர்வரும் 2005.02.18 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு திறக்கப் படவுள்ளது. எனவே அன்றைய தினமோ அல்லது அதற்குப் பின்னரோ வங்கிக்கு வருகை தந்து கணக்கினைத் திறப்பதற்கு ஆகக்குறைந்த தொகையாக ரூபா.100 ஐச் செலுத்தி கணக்கினைத் திறந்து வங்கியின் வாடிக்கையாளராக இணைந்து கொள்ளுமாறு அன்புடன் உங்களை அழைக்கின்றோம்.

தலைவர்,
மு/விசுவமடு விவசாயிகள்
ப.நோ.கூ.சங்கம்
விசுவமடு.

(5732)



பேருந்து தரிப்பு நிலையங்களில் "நிழற்குடை" அமைத்தல்

மேற்படி குடைகள் அமைக்கும் முகமாக தமிழீழப் போக்குவரவுக்கழக நடுவப் பணிமனை பரந்தன்-முல்லைத்தீவு தெருவில் 156 இடங்களைத் தெரிவு செய்துள்ளது.

இவ்விடங்களில் மேற்படி குடைகளை தங்கள் உறவினர்களின் நினைவாக அமைத்துத் தர விரும்பும் பொது மக்கள் 10.03.2005 ஆம் நாளிற்கு முன் எம்முடன் தொடர்பு கொள்ளுமாறு அன்பாக வேண்டுகிறோம்.

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:-
தமிழீழப் போக்குவரவுக்கழகம்
நடுவப்பணிமனை,
றெட்பானா ஒளிநிலா திரையரங்கிற்கு அருகே
விசுவமடு.

பொறுப்பாளர்,
தமிழீழப் போக்குவரவுக் கழகம்
நடுவப்பணிமனை,
விசுவமடு.

(சி.11342)







# நம்பிக்கையூட்டும் கால்பந்துப்போட்டி ரொனால்டினோ 11பேர் அணிக்கு வெற்றி



பார்சிலோனாவில் நடைபெற்ற முன்னணிக் கால்பந்து வீரர்கள் கலந்து கொண்ட நம்பிக்கையூட்டும் கால்பந்துப் போட்டியில் ரொனால்டினோ 11பேர் அணி 6-3 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

கடந்த டிசம்பர் மாதம் 26 ஆம் திகதி சுனாமி அலையால் இந்தோனேசியா, இலங்கை, இந்தியா, தாய்லாந்து உப்பட ஆசிய நாடுகளைச் சேர்ந்த இரண்டு இலட்சத்து 40ஆயிரம் பேர் இறந்தனர். இலட்சக்கணக்கானோர் வீடுகளை இழந்து தவித்தனர்.

சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு பல்வேறு விளையாட்டு அமைப்புகள் காட்சி போட்டி மூலம் நிதிதிரட்டியது. சுனாமி நிவாரணத்துக்காக சர்வதேச கால்பந்து சம்மேளனம் காட்சிப் போட்டியை நடத்த முடிவு செய்தது. இந்தப்போட்டி ஸ்பெயினில் உள்ள பார்சிலோனா நகரில் நேற்று முன்தினம் நடந்தது.

இந்தப்போட்டியில் உலகின் தலை சிறந்த வீரர்களான ஷீடேன், ஹென்றி (பிரான்ஸ்), டேவிட் பெக்காம் (இங்கிலாந்து), மால்டினி,டெல் பியரோ (இத்தாலி), நகட்டா (ஜப்பான்) ஆகியோர் கலந்து கொண்டனர். உலகக் கோப்பை போட்டியில் கதாநாயகனாக ஜொலித்த ரொனால்டோ இதில் பங்கேற்கவில்லை.

ஒரு அணிக்கு பிரேசிலைச் சேர்ந்த ரொனால்டினோ தலைவராகப் பணியாற்றினார். மற்றொரு அணிக்கு உக்ரைனைச் சேர்ந்த ஆண்ட்ரி செவ் சென்கோ தலைவராக இருந்தார்.

ரொனால்டினோ அணியில் அவரும், கேமருனைச் சேர்ந்த எடோவும் சிறப்பாக விளையாடிதலா மூன்று கோல்களை அடித்தனர். ஆண்ட்ரி அணியில் டெல்பியரோ, ஜோலா, ஹென்றி கேமரா ஆகியோர் கோல் அடித்தனர்.

இந்தக் காட்சி கால்பந்து போட்டியை 40 ஆயிரம் பேர் கண்டுகளித்தனர். இந்தப் போட்டி மூலம் ரூ.43 கோடி நிதி திரளும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.







# பிரீமியர்ஷிப் கால்பந்துப் போட்டி அர்சனல் அணிக்கு அபார வெற்றி



பிரிமீயர்ஷிப் கால்பந்து சம்பியன்ஷிப் போட்டியில் அர்சனல் அபார வெற்றி பெற்றது.

லண்டனில் 'பிரிமீயர்ஷிப் கால்பந்து சம்பியன்ஷிப்' போட்டிகள் நடந்து வருகின்றன. இதில் நேற்று முன்தினம் நடந்த போட்டியில் அர்சனல், கிறிஸ்டல் பேலஸ் அணிகள் மோதின. விறுவிறுப்பாக நடந்த போட்டியில் அர்சனல் அணியைச் சேர்ந்த நட்சத்திர வீரரான தியரி ஹென்றி 2, டென்னிஸ் பெர்காம்ப், ஆன்டனியோ, றேயோஸ் பேட்ரிக் வியராதலா ஒரு கோல் அடித்தனர். மற்ற வீரர்களின் சிறப்பான ஆட்டமும் கைகொடுக்க அர்சனல் 5-1 என்ற கோல் கணக்கில் கிறிஸ்டல் பேலசை வீழ்த்தியது. கிறிஸ்டல் பேலஸ் அணி சார்பில் ஆன்டி ஜான்சன் ஒரு கோல் அடித்தார்.

## நியூசிலாந்து அணியில் மில்ஸ்

அவுஸ்திரேலியாவுக்கு எதிரான ஒரு நாள் கிரிக்கெட் தொடரில் பங்கேற்கும் நியூசிலாந்து அணியே 20இற்கு 20ஓவர் போட்டியிலும் பங்கேற்கிறது.

அவுஸ்திரேலிய அணியுடன் இந்த வார கடையில் அப்போட்டி நடைபெறுகிறது. ஐந்துஆட்டங்கள் கொண்ட ஒருநாள் தொடரில் முதல் இரண்டு ஆட்டங்களுக்காக அறிவிக்கப்பட்டுள்ள நியூசிலாந்து அணியின் வேகப்பந்துவீச்சாளர் கயில் மில்ஸைச் சேர்த்துள்ளார். அணியின் பயிற்சியாளர் ஜான் பிரேஸ்வெல். மில்ஸ் உடற்தகுதி சோதனையில் தேர்வு பெற்றதையடுத்து இம்முடிவை மேற்கொண்டுள்ளார் அவர். ஜெ.்.ப் வில்சன், டேனியல் வெட்டோரி, ஸ்கொட் ஸ்டைரிஸ் ஆகியோரும் காயத்தால் அவதிப்பட்டு வந்தனர். அவர்களும் அணியில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

## அவுஸ்திரேலிய அணியில் ஹெய்டன் இணைப்பு விளையாடின் திறமையைக் காட்டுவேன்



நுரையீரல் வீக்கத்தால் அவதிப்பட்ட அவுஸ்திரேலிய கிரிக்கெட் வீரர் மத்யூ ஹெய்டன் கொஞ்சம் உடம்பு தேறியிருக்கிறார்.அவுஸ்திரேலிய கிரிக்கெட் வீரர் மத்யூஹெய்டனுக்கு இரண்டு பிரச்சினைகள். சமீபகாலமாக கிரிக்கெட்டில் சொல்லிக் கொள்ளும்படி பிரகாசிக்கவில்லை அதை விட முக்கியம் உடல் நிலையில் சரியில்லை. நுரையீரல் சவ்வுப் பகுதியில் ஏற்பட்ட வீக்கம் காரணமாக அவதிப்பட்டு வந்தார் ஹெய்டன். இப்போது தேறிவிட்டாராம்.

அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணி நியூசிலாந்து பயணமாகிவிட்டது. இந்த அணியில் பங்கேற்கிறார் ஹெய்டன். உடல் நிலை தேறிவிட்டது. ஆனாலும் 50 சதவீதம்தான் குணமாகியிருக்கிறது. அதனால் ஒன்றும் இல்லை. போட்டிகளில் வாய்ப்புக் கிடைத்தால் முழுத்திறமையையும் காட்ட முடியும் என்கிறார். ஹெய்டன்.

# சிறிலங்கா கிரிக்கெட் அணியின் பெருமைக்குரிய காலி மைதானத்தின் கதை முடிவுக்கு வருகிறது





சுனாமியால் பாதிக்கப்பட்ட காலி மைதானத்தைப் புதுப்பிக்கும் பணி கைவிடப்படுகிறது. மாற்று மைதானம் அமைக்கும் பணியில் இலங்கை கிரிக் கெட் நிர்வாகிகள் தீவிரமாக இறங்கியுள்ளனர்.

டிசம்பர் 26 இல் ஏற்பட்ட சுனாமிப் பேரலையால் இலங்கை பெரும் சேதத்தைச் சந்தித்தது. இதில் புகழ் பெற்ற காலி மைதானமும் பலத்த சேதமடைந்தது. இலங்கை அணிக்கு ராசியான இந்த மைதானத்தைக் கடந்த வாரம் அவுஸ்திரேலிய சுழற்பந்து வீச்சாளர் ஷேன்வோர்ன் பார்வையிட்டார். இலங்கை கிரிக்கெட் நிர்வாகிகளும் இதைக் தொடர்ந்து பார்வையிட்ட வண்ணம் இருந்தனர் காலி மைதானத்தை மீண்டும் புதுப்பிப்பதில் சில சிக்கல்கள் எழுந்துள்ளன. சர்வதேச கிரிக்கெட் சபை விதிகளின்படி போட்டி நடக்கும் மைதானம் வீரர்களுக்கு பாதுகாப்பு தரக்கூடியதாக இருக்க வேண்டும். அந்த வகையில பார்த்தால், கடலுக்கு அருகாமையில் உள்ள காலி மைதானத்தில் மீண்டும் சுனாமி அச்சம் ஏற்பட்டால் என்ன செய்வது என ஐ.சி.சி அச்சம் தெரிவிக்கிறது. சுனாமி வந்த நேரத்தில் 10மீற்றர் வரை இங்கு நீர் மட்டம் இருந்ததாகக் கூறப்படுகிறது. மீட்புப் பணிகளுக்கான செலவு ரூபா10 கோடியை தாண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது.

நிவாரண நிதி, ஐ.சி.சி. உதவிகளோடு இதைச் செய்து முடித்தாலும். மற்ற அணிகள் தைரியமாக வந்து விளையாட வேண்டுமே என்ற எண்ணமும் இலங்கை கிரிக்கெட் சபையைக் குழப்பி வருகிறது. சகல வசதிகளோடு காலி மைதானத்தைப் புதுப்பிக்கும் எண்ணத்தைக் கைவிட்டு மாற்றாக புதிய மைதானம் அமைக்கலாம் என்ற எண்ணத்திற்கு இலங்கை கிரிக்கெட் நிர்வாகிகள் வந்து விட்டனர். முதற் கட்டமாக தெற்கு கொழும்பில் இருந்து 115 கிலோ மீற்றர். தூரத்தில் ஒரு இடத்தைப் பார்வையிட்டு வந்துள்ளனர். விரைவில் இங்கு அல்லது வேறு இடத்தில் புதியமைதானம் கட்டப்படும் எனத்தெரிகிறது.

# வேகப்பந்து வீச்சாளர் அக்தர் மீது ஒழுங்கு விசாரணை இன்று





பாகிஸ்தான் கிரிக்கெட் சபையில் ஒழுங்கு நடவடிக்கைக் குழு முன்பு ஆஜராகி விளக்கம்அளிக்கும்படி அக்தர் கேட்டுக் கொள்ளப் பட்டுள்ளார்.

அவுஸ்திரேலிய தொடரின் போது நடனப் பெண் கிளப்பிய பாலியல் புகார் உட்பட பல் வேறு சர்ச்சைகளில் சிக்கினார் புயல் வேகப் பந்துவீச்சாளர் அக்தர். பின்னர் பாகிஸ்தான் திரும்பிய இவர் உள்ளூர் போட்டியிலும் பங்கேற்க மறுத்து விட்டார். இந்தச் சம்பவங்கம் தொடர்பாக வரும் 18ஆம் திகதி இல் ஒழுங்கு நடவடிக்கை குழு முன்பு இவர் ஆஜராகி விளக்கம் தர வேண்டும். இந்திய தொடருக்கான பாகிஸ்தான் அணி வரும் 19ஆம் திகதி தேர்வு செய்யப்படுகின்றது. இந் நிலையில் முழு உடல் தகுதியை நிரூபித்து ஒழுங்கு நடவடிக்கை குழுவும் திருப்தி தெரிவித்தால் மட்டுமே அக்தர் அணியில் இடம்பெற முடியும்.



ஆபிரிக்கா பாதுகாப்பு கழகத்தின் இந்தியாவுக்கான சுற்றுலா தூதராக தென்னாபிரிக்க வீரர் ஜொன்டிரோட்ஸ் நியமிக்கப்பட்டுள்ளார். நேற்று முன்தினம் மும்பையில் நிருபர்களைச் சந்தித்து ஆபிரிக்க நாடுகளில் உள்ள வன விலங்கு சரணாலயங்கள் பற்றி எடுத்துக் கூறினார்.

## சிந்தனைக்கு



இன்றைய உலக ஒழுங்கை பலம் தான் நிர்ணயிக்கிறது.

தமிழீழ தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை, கிளிநொச்சி. 17-02-2005
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் natham 23 ela @ yahoo. com

# பாதுகாப்பிற்கு வழிவிடு!

"சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கான நம்பிக்கையை மீளக்கட்டியெழுப்புவதற்கு சிறிலங்கா ஆயுதப்படையினருடன் இயங்கும் ஆயுதக் குழுக்களின் ஆயுதங்களைக் களைதல் வேண்டும்" என்ற விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் அவர்களின் கோரிக்கையை இலங்கை இனப்பிரச்சினை சமாதானத் தீர்வில் அக்கறை கொண்ட எவருமே நிராகரிக்க முடியாது.

ஆனால், இக்கோரிக்கையானது யுத்த நிறுத்த உடன் பாட்டில் புதிதாகச் சேர்த்துக்கொள்ளப்பட வேண்டிய தொன்றோ அன்றி பரிசீலிக்கப்பட்டு தீர்மானிக்கப்பட வேண்டிய தொன்றோ அல்ல. ஏனெனில் யுத்த நிறுத்த உடன் பாட்டில் இது ஏற்கனவே உள்ளடக்கப்பட்டுள்ள ஒரு விடயம் தான்.

2002ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் கைச்சாத்தாகிய யுத்த நிறுத்த உடன்பாடு அடுத்த வராத்தில் மூன்றாண்டுகளை நிறைவு செய்யவுள்ளது. ஆனால், இவ் உடன்பாட்டின் 1.8விதி தமிழ் துரோக இராணுவக் குழுக்களின் ஆயுதக்களைவு பற்றிக் குறிப்பிடுகின்றது. இதன் பிரகாரம் யுத்த நிறுத்தம் அமுலுக்கு வரும் திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் இக்குழுக்களை சிறிலங்கா அரசு ஆயுதமற்றவர்களாக்கும். இந்த அணிகளில் உள்ள ஆட்களுக்கு சிறிலங்கா அரசு தனது ஆயுதப்படைகளின் கட்டுப்பாட்டிற்குள்ளும், ஒழுங்கமைப்பிற்குள்ளும் இணையும் வாய்ப்பை அளித்து வடக்கு-கிழக்கு மாகாணங்களுக்கு அப்பால் பணிபுரியச் செய்யும் எனத் தெரிவிக்கின்றது.

ஆகையினால், தமிழ் ஆயுதக்குழுக்களின் ஆயுதங்கள் களையப்பட வேண்டும் என்பதும், அவை வடக்குக் -கிழக்கில் செயற்பட அனுமதிக்கப்படல் கூடாது என்பதும் யுத்த நிறுத்த விதிமுறையாகும். ஆனால், சிறிலங்கா அரசாங்கம் இவ்விதியினை அமுல்படுத்தாமையே இன்று சமாதான முயற்சிகளை முன்னெடுப் பதனால் மீண்டும் ஆரம்பிப்பதானால் நம்பிக்கையை மீளக் கட்டியெழுப்ப வேண்டியதான தேவையை ஏற்படுத்தியுள்ளது.

சிறிலங்கா அரசும் அதன் ஆயுதப்படைத் தரப்பும் விடுதலைப் புலிகள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலுக்கும், தமக்கும் தொடர்பில்லை என்பது போலவும், தாக்குதலுக்கு வேறொரு தரப்பைச் சுட்டிக்காட்டுவது போன்றும், தாக்குதல் நடத்துவதற்குப் பிரதேசம் சாதகமாகவுள்ளது. (கட்டுப்பகுதி) என்பது போன்றும் கூறும் காரணிகள் ஏற்புடையவையல்ல. ஏனெனில் இத்தாக்குதல்கள் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் நடத்தப்பட்டுகின்றன என்பதே முக்கியமானதாகும்.

அதாவது இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் அரசியல் பணியில் ஈடுபடும் போராளிகளுக்கு பாதுகாப்பு அளிக்க வேண்டியது இராணுவத்தின் கடைமையாகும். அவ்வாறு அளிக்க முடியாது/ முடியவில்லை எனின் அப்பிரதேசத்தை இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதி என்றோ, அரசின் கட்டுப்பாட்டு பகுதியென்றோ கொள்ளுதல் பொருத்தப்பாடானதாக இருக்க மாட்டாது.

ஏனெனில் இராணுவத்தால் பாதுகாப்பு அளிக்க முடியாது விடில் தம்மீது தாக்குதல் நடத்துபவர்களைத் தேடி அழிக்கும் உரிமை விடுதலைப் புலிகளுக்குண்டு. அவ்வாறு இவ் உரிமை இல்லாது போனால் விடுதலைப் புலிகள் மீது தாக்குதல் நடத்தியவர்களை குறைந்த பட்சம் தேடி அளிக்கும் நடவடிக்கையில் இராணுவம் ஈடுபட்டிருத்தல் வேண்டும். இதனைக் கண்காணிப்புக்குழு மேற்பார்வை செய்திருத்தல் வேண்டும்.

அவை இராணுவத்திற்குச் சாத்தியமற்றோ, இயலாமலோ போனால இராணுவத்தால் பாதுகாப்பு வழங்கப்பட முடியாத இராணுவக் கட்டுப் பாட்டுப் பகுதியில் விடுதலைப் புலிகள் தற்பாதுகாப்பிற்கான ஆயுதங்களைக் கொண்டு செல்வதற்கு அனுமதி அளிக்கப்படுதல் வேண்டும். அவ்வேளையில் தமது பாதுகாப்பிற்கு விடுதலைப் புலிகள் தாமே பொறுப்பேற்பவர்கள் ஆவார்கள்.

அவ்வாறு இல்லாது இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியெனக் கூறிக்கொண்டு அங்கு நடைபெறும் தாக்குதலுக்கும், தமக்கும் பொறுப்பில்லை என அரசாங்கமும் சரி, இராணுவமும் சரி கூறிக் கொள்வது பொருத்தப்பாடற்றது. இவ்விளக்கத்தினை கண்காணிப்புக் குழு ஏற்றுக்கொண்டு தாக்குதல் நடத்தியவர்களைக் கண்டறிய முடியவிலையெனக் கூறுவதோ இது யுத்த நிறுத்தமீறல் அல்ல எனக் கூறுவதோ. பொறுப்புள்ள கூற்றுக்களாக அமைய மாட்டாது.

ஏனெனில் யுத்த நிறுத்தம் நிலைத்திருப்பதற்கும் சமாதான முயற்சிகள் முன்னெடுக்கப்பட வேண்டுமானால் இத்தகைய கூற்றுக்களோ, சூழ்நிலைகளோ உதவப் போவதில்லை. விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் அவர்கள் கூறியிருப்பது போன்று அரச ஆதரவு ஆயுதக் குழுக்களின் ஆயுதங்கள் களையப்படவேண்டும்.

அவ்வாறான ஆயுதக் குழுக்கள் வடக்கு-கிழக்கில் இல்லையெனில் நடத்தப்படும் தாக்குதலுக்கு இராணுவம் பொறுப்பேற்க வேண்டும். அவ்வாறு பொறுப்பேற்காதுவிடில் விடுதலைப் புலிகள் தமது பாதுகாப்பை உறுதிப்படுத்திக்கொள்ள தற்பாதுகாப்பிற்கான ஆயுதங்களை அனுமதித்தல் வேண்டும். அதுவும் சாத்தியமற்றதெனில் தம்மால் பாதுகாப்பு வழங்கமுடியாது எனக் கருதும் பகுதிகளை இராணுவக் கட்டுப்பாட்டுப்பகுதியெனக் கூறிக்கொள்வதைத் தவிர்த்துக் கொள்ளுதல் வேண்டும். இதுவே யுத்த நிறுத்தத்தை தக்க வைக்கவும், சமாதானத்தை முன்னெடுக்கவும் உதவக் கூடிய மார்க்கமாக இருக்கும்.

# சுனாமியின்போது தவறவிடப்பட்ட குழந்தை பெற்றோரிடம் ஒப்படைப்பு

சுனாமி கடலனர்த்தத்தின்போது தவறவிடப்பட்ட குழந்தை நேற்றுப் பெற்றோரிடம் ஒப்படைக்கப் பட்டுள்ளது. குழந்தையின் தாயார் ஜெனிற்றா ஜெயராஜாவும், தந்தை ஜெயராஜாவும் மிகுந்த மகிழ்ச்சியுடன் கல்முனை நீதிமன்றத்தில் ஆஜராகியிருந்தனர்.

4 மாதங்கள் முடிவடைந்து ஐந்தாவது மாதத்திற்குள் காலடி வைக்கும் இக் குழந்தையை, நீதிமன்றப் பதிவாளர் எம்.எஸ்.எம்.நசீர் கல்முனை வைத்தியசாலையிலிருந்து வந்திருந்த டாக்டர் கோபால முகுந்தனிடமிருந்து பெற்றுக் கொண்டார்.

மாவட்ட நீதிவான் திரு.எம்.பி. மொஹிதீன், 22 பக்கங்கள் கொண்ட இறுதித் தீர்ப்பை வாசித்த பின்னர், குழந்தையைப் பெற்றோரிடம் ஒப்படைத்தார்.

ஏராளமான ஊடகவியலாளர்கள் நிறைந்திருந்த அவ்விடத்தில், ஆனந்தக் கண்ணீருடன் பெற்றோர் குழந்தையைப் பொறுப்பேற்றுள்ளனர்

வைத்தியசாலை ஊழியர்கள், வைத்தியர்கள், மற்றும் நீதிமன்ற அங்கத்தவர்கள் உட்பட அனைத்து சர்வதேச மற்றும் உள்ளூர் ஊடகங்களுக்கும் நன்றி தெரிவித்த பெற்றோர், அங்கிருந்து குழந்தையுடன் தாம்தங்கியிருந்த பாண்டிருப்பிலுள்ள உறவினரின் இல்லத்திற்கு குழந்தையுடன் சென்றனர்.

பின்னர் தங்களது சொந்த இடமான கல்முனை-1 கடற்கரை வீதிக்கு அபிலாசுடன் பயணமாகத் தீர்மானித்துள்ளதாக அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

வைத்தியர் கோபால் முகுந்தன், அபிலாசின் தந்தையுடன் பேசுகையில், குழந்தை சரியான பெற்றோரிடம் செல்ல வேண்டுமென்ற ஒரே விருப்பில் மட்டுமே நாம் அனைத்து விடயங்களிலும் ஈடுபட்டோம். உங்களிடம் உங்களது குழந்தை கிடைத்ததில் எமக்கு மிகவும் மகிழ்ச்சி என்றும் தெரிவித்தார்.

ஏற்கனவே ஊடகங்கள் தெரிவித்தது போன்று இரு பெற்றோர் இந்தக் குழந்தைக்கு உரிமை கொண்டாடினார்கள் என்பது தவறான செய்தியென்றும், ஆரம்பத்தில் பல பெற்றோர்கள் குழந்தை தங்களுடையது என்று குறிப்பிட்டாலும் பின்னர், இந்தப் பெற்றோர் மட்டுமே தொடர்ந்து உரிமை கோரியதுடன், சட்டரீதியாகவும் நடவடிக்கைகளை எடுத்ததாக வைத்திய நிலைய வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

# இந்திய மின் உற்பத்தி நிறுவனம் இலங்கையில் மின் நிலையம் அமைப்பு

இந்திய மின் உற்பத்தி நிறுவனம் ஒன்று இலங்கையில் மின் உற்பத்தி நிலையம் ஒன்றை உருவாக்க விருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.இந்திய தேசிய மின் உற்பத்திக் கூட்டுதாபனத்தால் இலங்கையில் 15பில்லியன் ரூபா செலவில் இந்த மின் உற்பத்தி நிலையம் உருவாக்கப்படவுள்ளது. 300 மெகா விற் மின்சாரத்தை உற்பத்தி செய்யும் வகையில் இந்த நிலையம் அமைக்கப்படுமென இந்திய நிறுவனத்தின் பணிப்பாளர் சி.பி.ஜெயின் தெரிவித்துள்ளார்.

# ஹக்கீமின் சதித்திட்டத்தாலேயே நானும் குடும்பமும் நீதிமன்றில் நிற்கின்றோம்

**-முன்னாள் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ரத்வத்த கூறுகிறார்**

"நான் நிரபராதி" எனக்கும், உடதலவின்ன படுகொலை சம்பவத்துக்கும் எவ்வித தொடர்பும் கிடையாது. சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் மேற்கொண்ட சதித் திட்டத்தால் நானும், எனது குடும்பத்தினரும் இவ் வழக்கில் அநாவசியமாக சம்பந்தப்படுத்தப்பட்டு நீதிமன்றில் நிற்கிறோம்" என்று முன்னாள் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்த நீதிமன்றில் தெரிவித்தார். உடதலவின்னப் பகுதியில் 2001 பொதுத் தேர்தல் தினத்தன்று 10 முஸ்லிம் இளைஞர்கள் கொல்லப் பட்டமை தொடர்பான வழக்கு கொழும்பு மேல் நீதிமன்றத்தில் கடந்த திங்கள் இடம் பெற்றபோது சாட்சியம் அளிக்கையிலேயே அனுருத்த ரத்வத்த இவ்வாறு தெரிவித்தார். இவ் வழக்கு கொழும்பு மேல்நீதிமன்ற நீதிபதிகளான தீபாலி விஜயசுந்தர, சுனில் ராஜ பக்ஷ ஆகியோர் முன்னிலையில் இடம்பெற்றது. பிரதிவாதிகள் அனைவரும் ஆஜராகியிருந்தனர். வழக்கின் முதலாம் எதிரியான அனுருத்த ரத்வத்தவின் சாட்சியத்தைப் பிரதிவாதிகளின் சார்பில் ஆஜராகியிருந்த சனாதிபதி சட்டத் தரணி விஜயதாச ராஜபக்ஷ நெறிப படுத்தினார்.

அனுருத்த ரத்வத்த தனது சாட்சியத்தில் தொடர்ந்து தெரிவித்ததாவது,

என் மீதான குற்றச்சாட்டுகள் அனைத்தையும் முற்றாக மறுக்கிறேன். எனது டிபெண்டர் வாகனங்களை திருடிச் சென்ற நபர்களே இக் கொலைகளைச் செய்ய எனது வாகனங்களைப் பயன்படுத்தியிருக்கிறார்கள் என்று நம்புகிறேன். 2001 டிசம்பர் 05ஆம் திகதி பொதுத் தேர்தல் இடம்பெற்றபோது நான் பாதுகாப்புக் காரணங்களுக்காகக் கண்டியில் உள்ள எனது இல்லத்திலிருந்து வெளியே செல்லவில்லை. எனது வாக்களிப்பைக் கூட இல்லத்திலிருந்தவாறே மேற்கொண்டேன். சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அதற்கான விசேட அனுமதியை வர்த்தமானி அறிவித்தல் மூலம் பிரகடனப்படுத்தியிருந்தார் எனத் தெரிவித்தார்.

# இன்னும் ஐந்து வருடகாலத்திற்கு நாம் ஆட்சியில் இருப்போம்

**-அமைச்சர் அநுரா பண்டார நாயக்க தெரிவிப்பு**

(கொழும்பு)

எமக்கு மக்கள் ஆணை ஆறு வருடத்திற்கு இருக்கின்றது. அதில் ஒருவருடம் முடிவடைந்துள்ளது. இன்னும் ஐந்து வருடங்கள் நாங்கள் ஆட்சி செய்வோம் முடியுமானால் அதற்குக் கூடிய காலமும் நிர்வாகத்தில் இருப்போம். என சுற்றுலாத்துறை அமைச்சர் அநுரா பண்டாரநாயக்க கூறியுள்ளார்.

மல்வத்த மகாநாயக்கரை நேற்று முன்தினம் சந்தித்த பின்னர் கருத்துத் தெரிவிக்கும் போதே அநுரா இவ்வாறு கூறினார்.

கூட்டமைப்பு அரசாங்கத்தினுள் நெருக்கடிகள் இருந்தபோதிலும் ஐந்து வருட காலத்திற்கு கூட்டமைப்பு அரசாங்கம் ஆட்சியை நிர்வகிக்கும். விசேடமாக இக்கூட்டமைப்பை உடைப்பதற்கு சுதந்திரக்கட்சிக்கு விரும்பமில்லையெனவும் கூறிய அவர்,

எமக்கிடையே பிரச்சினை இருக்கிறது. நாம் இல்லையென்று கூறவில்லை. நாம் பொய் கூற வேண்டிய அவசியம் கிடையாது. நான் நேர்மையாகவும், தெளிவாகவும் கூறுகின்றேன். அத்துடன் இந்தக் கூட்டமைப்பு அரசாங்கத்தை உருவாக்குவதில் முதன்மை வகித்தவன் என்ற வகையில் எம்மிடையே எந்தப் பிரச்சினைகள் இருந்தாலும் மக்கள் இதனை உடைக்க விட மாட்டார்கள். மக்கள் இந்தக் கூட்டமைப்பு அரசாங்கம் உடைய இடமளிக்கமாட்டார்கள். சிறிலங்கா சுதந்திரக்கட்சி இந்தக் கூட்டமைப்பு அரசாங்கம் வீழ்ச்சி காண்பதில் விருப்பம் கொண்டிருக் கவில்லை. மற்றைய கட்சிகள் குறித்து எனக்குத் தெரியாது. எமக்கு மக்கள் ஆணை ஆறுவருடத்திற்கு இருக்கின்றது. ஒருவருடம் முடிவடைந்துள்ளது. இன்னும் ஐந்து வருடங்கள் ஆட்சி செய்வோம் முடியுமானால் அதற்குக் கூடுதலான காலமும் நிர்வாகத்தில் இருப்போம் என்றார் அநுரா.

# மின்சாரசபை ஊழியர்கள் தொழிற்சங்கப் போராட்டம்

மின்சார சபை ஊழியர்கள் நேற்று போராட்டம் ஒன்றை நடத்தினர். நேற்றுக் காலை 8.00 மணிக்கு மின்சார சபையின் தலை மைக் காரியாலயத்திற்கு முன்பாக இந்த ஆர்ப்பாட்டம் ஆரம்பமாகியது. மின்சார சபை ஊழியர்கள் தொழிற்சங்கத்தின் ஏற்பாட்டில் ஒழுங்கு செய்யப்பட்ட இந்த ஆர்ப்பாட்டம் சபையின் உட்கட்டமைப்பை மாற்று வதற்கு எதிர்ப்புத் தெரிவித்தும், பகுதி நேர ஊழியர்களை நிரந்தரமாக்கு மாறு கோரியும் நடத்தப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (32)

# அரசசார்பற்ற நிறுவனங்கள் நிதியை ம.வங்கியூடாகவே கையாள வேண்டும்

## அரசாங்கம் அறிவிப்பு

ஆரச சார்பற்ற நிறுவனங்களின் நிதி அனைத்தும் மத்திய வங்கியின் ஊடாகவே கையாளப்பட வேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ளது. சுனாமியின் பின்னர் 600இற்கும் அதிகமான அரச சார்பற்ற நிறுவனங்கள் இலங்கையில் செயற்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டுகின்றது. இந்த நிறுவனங்களுக்கு வெளிநாடுகளிலிருந்து அனுப்பி வைக்கப்படும் நிதி சரியான முறையில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு சென்றடைவதை உறுதிப்படுத்தும் நோக்கிலேயே இந்த நடவடிக்கை எடுக்கப் படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (32)

# அமெரிக்க முன்னாள் சனாதிபதிகள் ஞாயிறு இலங்கை வருகின்றனர்

(கொழும்பு)

அமெரிக்காவின் முன்னாள் சனாதிபதிகளான பில்கிளிங்டன், ஜோஜ்புஷ் ஆகியோர் வரும் ஞாயிற்றுக்கிழமை இலங்கைக்கு வரவுள்ளனர்.

இவர்கள் இருவரும் சுனாமியால் பாதிக்கப்பட்ட நாடுகளுக்கு வழங்கப்படும் அமெரிக்க தனியார் நிதியை உயர்த்தும் செயற்பாடுகளுக்குப் பொறுப்பாக செயற்படவுள்ளனர்.

இதேவேளை சுனாமி கடல் அனர்த்தத்தினால் வீடுகளை இழந்த இலட்சக்கணக்கானோருக்கு வீடுகளை அமைத்துக்கொடுப்பதற்கான நிதி சேகரிப்பு ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக வெள்ளை மாளிகை தெரிவித்துள்ளது.

இதற்காக முன்னாள் சனாதிபதிகள் தொலைக்காட்சிமூலம், உதவிகளை வழங்குமாறு மக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# கடற்றொழிலாளர் சங்கங்கள் இன்று யாழ் . இல் பேரணி

கிழக்கில் அரசியல் பணிகளில் ஈடுபட்டிருந்த வேளையில் சுட்டுக் கொலை செய்யப்பட்ட மட்டு- அம்பாறை அரசியல் துறைப் பொறுப்பாளர் கௌசல்யன் மற்றும் போராளிகள், மாமனிதர் சந்திரநேரு ஆகியோரது படுகொலைகளைக் கண்டித்தும்,சுனாமி கடற்கொந்தளிப்பினால் ஏற்பட்ட பாதிப்புக்கள் தொடர்பில் வட-கிழக்கு மக்கள் விடயத்தினில் இலங்கை அரசு காட்டி வரும் பாரபட்சம் என்பனவற்றைக் கண்டித்தும் கண்டனப் பேரணியொன்றை யாழ்.மாவட்ட மீனவ சங்கங்கள் இன்று நடாத்த வுள்ளன.

காலை 10 மணிக்கு நல்லூர் ஆலயப்பகுதியிலிருந்து புறப் படும் இப்பேரணி, போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் யாழ். அலுவலகத்தினில் முடிவடையவுள்ளது. அங்கு தமது கோரிக்கைகள் அடங்கிய மகஜர்களை மீனவ சங்கப்பிரதிநிதிகள் கையளிக்கவுள்ளதாகத் தெரியவருகிறது. (27)

# ஐ.நா வுக்கு எதிராக பிக்குமார் ஆர்ப்பாட்டம்

ஐக்கிய நாடுகள் சபையின் வதிவிடப்பிரதிநிதி பேர்மிங்கம்மை ஏன் நாடு கடத்தக்கூடாது என கொழும்பு ஊடகம் ஒன்று கேள்வி எழுப்பியுள்ளது .

அவர் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு ஆதரவாகவே செயற்பட்டு வருவதற்கு யாழ்ப்பாணம், கிளிநொச்சி மற்றும் வவுனியா போன்ற இடங்களில் ஐக்கிய நாடுகள் சபையின் அலுவலகங்கள் அமைந்துள்ளமையைக் குறிப்பிட்ட ஊடகம் சுட்டிக்காட்டியுள்ளது

ஐக்கிய நாடுகள் சபையின் செயலர் இலங்கைக்கு வந்தபோது அவரை தமிழீழ விடுதலைப்புலிகளின் பகுதிகளுக்குச் செல்லுமாறு வலியுறுத்தியதும் வதிவிடப்பிரதிநிதியே என கொழும்பு ஊடகம் தெரிவித்துள்ளது. (32)

### இரு வெளிநாட்டவர் விபத்தில் பலி

எகலியகொடையில் நேற்று இடம் பெற்ற விபத்து ஒன்றில் இரண்டு வெளிநாட்டவர்கள் கொல்லப்பட்டனர். மேலும் இருவர் காயமடைந்தனர். இராணுவ வாகனம் ஒன்றுடன் வெளி நாட்டவர்கள் பயணித்த வாகனம் ஒன்று மோதியபோதே இந்த அனர்த்தம் ஏற்பட்டுள்ளது. (32)

### புலிகளைத்...

பயங்கரவாதத் தாக்குதலின் பின் கனடாவிலும் பயங்கரவாதத் தடைச்சட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. அதன் கீழ் இதுவரை 35 அமைப்புக்கள் பயங்கரவாத அமைப்புக்களாக பல்வேறு கட்டங்களாகப் அறிவிக்கப்பட்டிருந்தாலும், விடுதலைப்புலிகள் தடைசெய்யப்பட்ட அமைப்பாகக் கனடாவில் இதுவரை அறிவிக்கப்படவில்லை. 2003ஆம் ஆண்டு மார்ச் மாதம், விடுதலைப்புலிகளையும் உள்ளடக்கி ஆறு தென்னாசிய அமைப்புக்களைத் தடைசெய்யுமாறு கனேடிய உளவுத்துறை வேண்டுகோள் விடுக்க, கனேடிய மந்திரிசபை விடுதலைப்புலிகளைத் தவிர்த்து ஏனைய அமைப்புக்களையே அப்போது தடை செய்தது. எனினும் வலதுசாரிப் போக்குடைய கனேடிய எதிர்கட்சியான கன்சவேட்டிவ் கட்சியும், வலதுசாரி மற்றும் புதிய குடிவரவாளர் எதிர்ப்புப் பத்திரிகைகளும் அவ்வவ்போது விடுதலைப்புலிகள் தடை விடயத்தை கனேடிய பாராளுமன்றத்திற்கு உள்ளும் வெளியும் தொடர்ந்தும் எழுப்பி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# அம்பாறை மாவட்டத்தில் திலீபன் மருத்துவமனை திறப்பு

அம்பாறை மாவட்டத்தில் தியாக தீபம் திலீபன் மருத்துவமனை நேற்றுக்காலை 10.00 மணியளவில் திறந்து வைக்கப் பட்டது.

அம்பாறை மாவட்டத்தில் திருக்கோயில் பிரதேச சபைக்கு உட்பட்ட மீள்குடியேற்றக் தங்கவேலாயுதபுரத்தில் அம்பாறை மாவட்ட மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் ஆவர்த்தனா தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில் தமிழீழ தேசியக் கொடியினை அம்பாறை மாவட்ட படையணித்தளபதி மதுரகவி ஏற்றிவைத்தார்.திலீபன் மருத்துவ மனையினை அம்பாறை மாவட்டத் தளபதி ஜனார்த்தனன் திறந்துவைத்தார். பெயர்ப்பலகையினை தமிழீழ கள மருத்துவ பொறுப்பாளர் மனோஜ் திரை நீக்கம் செய்துவைத்தார். இந் நிகழ்வில் பிரதம அதிதிகளாக திருக்கோவில் சுகாதார வைத்திய அதிகாரி சுலோஜனா, திருக்கோவில் பிரதேசசெயலாளர் தவராசா, அம்பாறை மாவட்ட தமிழீழ மருத்துவப் பொறுப்பாளர், தமிழீழ திலீபன் மருத்துவமனைப் பொறுப்பாளர், தம்பிரவில் மத்திய மகாவித்தியாலய அதிபர் ஜெயந்தன், உருமன்குளம் கோட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் நிலாகரன், ஆகியோர் உப்பட வேறு தரப்பினரும் இதில் கலந்து கொண்டு சிறப்பித்தனர். சிறப்புரையினை அம்பாறை மாவட்ட தளபதி ஜனார்த்தனன் ஆற்றினார்.

### கௌசல்யன்...

னிதர் சநிதிரநேருவினதும் படுகொலைகளை வன்மையாகக் கண்டிக்கின்றோம்"

"சிறிலங்கா அரசின் இரட்டை வேடத்தை உலகிற்கு அம்பலப் படுத்துவோம்"

இலங்கை அரசினால் திட்டமிட்ட முறையில் தமிழீழ விடுதலைப் புலிகள் மீது மேற்கொள்ளப்படும் நிழல் யுத்தத்தின் உண்மைத்தன்மையை உலகிற்கு தெளிவுபடுத்த வேண்டும்" போன்ற தலைப்புக் களுடன் காணப்பட்டது.

மேற்படி மகஜர்கள் யாழ் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம், தமிழ் மாணவர் ஒன்றியம், பகல்நேர மாணவர் மன்றம், தொழில் நுட்பக் கல்லூரி மாணவர் ஒன்றியம், உயர் தொழில் நுட்பக்கல்வி நிறுவகம், கல்வி மேம்பாட்டுப் பேரவை யாழ் மாவட்டம், வடமாகாண அதிபர்கள் சங்கம், மற்றும் தென்மராட்சி கல்விச் சமூகம் மற்றும் பொது அமைப்புக் களாலும் அந்தத்தப் பிரதிநிதிகளால் கையளிக்கப்பட்டன. (சு.33)

# வடக்குக் கிழக்கு ம.உ.செ தலைவருடன் ச.செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகள் சந்திப்பு

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் பிரதிநிதிகள் மூவர் கிளிநொச்சியில் வடக்குக் கிழக்கு மனித உரிமைகள் செயலகத்தில் அதன் தலைவர் வண.கருணாரட்ணம் அடிகளாரைச் சந்தித்து பரஸ்பரம் கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டுள்ளார்.

மத்திய தென் ஆசிய நடவடிக்கைகளுக்கு தலைமை வகிக்கும் பேர்ணாட்ஜூலியர் சிறிலங்காவுக்கான பிரதிநிதி தெய்றி மெற்றற்றசல் ,பேர்ணாட் (கிளிநொச்சி வதிவிடப் பிரதிநிதி), ஆகியோரே இச் சந்திப்பில் இடம்பெற்ற சர்வதேச செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகளாவார்.

இதன்போது வடக்குக் கிழக்கு மனித உரிமைகள் செயலகத்தின் ஸ்தாபக உறுப்பினர்களில் ஒருவரான சந்திரநேரு அரியநாயகம் அவர்களின் கொலை குறித்துக் கேட்டறிந்து கொண்டு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகள் அவரது குடும்பத்தினருக்கு தமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்தனர். மேலும் அண்மையில் விடுதலைப்புலிகளால் பெற்றோரிடம் கையளிப்பதற்கென ஒப்படைக்கப்பட்ட சிறுவர்களின் விபரங்களை செல்வி பேர்ணாட் கோரினார்.

# கண்காணிப்புக்குழுத் தலைவராக ஹக்ரப் ஹக்லண்ட் நியமனம்

இலங்கை யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தற்காலிக தலைவாரான ஹக்ரப் ஹக்லண்ட மீண்டும் நியமிக்கப் பட்டுள்ளார்.இன்று இந்த நியமனத்தை நோர்வே வெளிவிவகார அமைச்சா ஜோன்பீற்றர்சன் அறிவித்துள்ளார்.தற்போதைய கண்காணிப்புக் குழுத் தலைவர் டொன் புறூவ் கொவ்டே மருத்துவ சிகிச்சைகளுக்காக இலங்கையை விட்டு வெளியேறியுள்ளதாகவும், அவருடைய இடத்திற்கு மீண்டும் ஹக்ரப்ஹக்லண்ட் நியமிக்கப்பட்டுள்ளதாகவும் அறிவிக் கப்பட்டுள்ளது. (32)

# விமான நிறுவன அதிகாரி சுனாமியின் பெயரில் மோசடி

சிறிலங்கா விமான நிறுவன அதிகாரி ஒருவர் சுனாமியின் பெயரில் ஊழல் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளமை கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. சுனாமியினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்குவதற்கு ஒதுக்கப்பட்ட நிதியில் 20 இலட்சம் ரூபா மோசடி செய்துள்ளதாக இவர் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. பாதிக்கப்பட்ட மக்களுக்கான வீடமைப்புத் திட்டம் ஒன்றிற்கு நிதி வழங்குவதாகக் குறிப்பிட்டு 10 இலட்சம் ரூபா பணத்தினையும், 10 இலட்சம் ரூபாவிற்கான கசோலையினையும் பெற்றுக்கொண்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இந்த விடயம் தொடர்பில் விசாரணைகள் இடம்பெற்று வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (32)

# கிளிநொச்சி மத்திய கல்லூரியில் கனரக வாகன ஓட்டுனர் பயிற்சி நெறி

கடந்த காலங்களில் கிளிநொச்சி கல்வி வலயத்தின் முறைசாராக கல்விப்பிரிவால் நடாத்தப்பெற்ற பாடநெறிகளில் கனரகவாகன ஓட்டுனர்களுக்கான பயிற்சிநெறி எதிர்வரும் 1-3-2005 அன்று கிளி நொச்சி மத்தியகல்லூரியில் ஆரம்பிக்கப்படவுள்ளது. ஏற்கனவே கனரக வாகன பாடநெறிகளில் கலந்து கொண்டவர்களுக்கான ஒன்றுகூடல் நிகழ்வு எதிர்வரும் 27 ஆம் திகதியன்று பிற்பகல் 4.00 மணிக்கு கிளி.மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளதால் மேற்படி பாடநெறிகளில் தோற்றியவர்கள் அன்றைய கலந்துரையாடலில் தவறாது கலந்துகொள்ளும் வண்ணம் கிளி.மத்தியகல்லூரி முதல்வர்ஆர். இராஜ மகேந்திரன் வேண்டியுள்ளார். (சோ)

### கௌசல்யன்கொலை...

வவுனியா, மன்னார், திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களின் படை அதிகாரிகளையும் விடுதலைப்புலிகள் இயக்க முக்கியஸ்தர்களையும் சந்திக்க வைப்பதற்கு முயற்சிகள் நடைபெறுகின்றன.

### அமைச்சில்...

வழங்குமாறு அவர்கள் கேட்டுள்ளனர்.இந்தக் கோரிக்கைக் கடிதத்தின் பிரதிகள் சனாதிபதி, பிரதமர், எதிர்கட்சிதலைவர், பொதுநிர்வாக அமைச்சர் உட்பட்டோருக்கு அனுப்பிவைக் கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (32)

### வடக்கு...

காட்டியுள்ளது'' என்றும் தமிழ்ச்செல்வன் தெரிவித்தார்.

அரசியல் துறைப் பொறுப்பாளர் தமிழ்ச் செல்வன் தனது மட்டக்களப்பு, அம்பாறை விஜயத்தை நிறைவு செய்து கொண்டு நேற்றுப் பிற் பகல் 3.30 மணியளவில் சிறிலங்கா விமானப் படை விசேட உலங்கு வானூர்தி மூலம் திருமலை மாவட்டம்- விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் உள்ள சம்பூர் மகாவித்தியாலய மைதானத் தில் வந்திறங்கினார். இலங்கைப் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் வழித்துணையுடன் வந்த அரசியல் துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வனை, மாவட்டக் கட்டளைத் தளபதி கேணல் சொர்ணம், மாவட்ட அரசியற் துறைப் பொறுப்பாளர் எழிலன் ஆகியோர் வரவேற்றனர். தமிழ்ச்செல்வனுடன் நீதித்துறைப் பொறுப்பாளர் பரா, நிதித்துறை பொறுப்பாளர் தமிழேந்தி, மாவீரர் காப்பகப் பொறுப்பாளர் பொன். தியாகம், சிரேஷ்ட உறுப்பினர் வே.பாலகுமாரன் ஆகியோரும் வந்தனர். இன்று வியாழன் சம்பூரில் திருகோணமலை மாவட்ட சமூக அமைப்புக்களின் பிரதிநிதிகளைச் சந்திக்கும் தமிழ்ச்செல்வன் நாளை வெள்ளிக்கிழமை பகல் முஸ்லிம் அமைப்புக்களின் பிரதிநிதிகளைச் சந்தித்து உரையாடவுள்ளார். என்று தெரிவிக்கப் பட்டது. (25)

யாழ்ப்பாணத்தில் ஈழநாதம் பணிமனை

தமிழர் தாயகத்தின் தேசிய நாளிதழான ஈழநாதம் – அதன் புதிய பணிமனையினை யாழ்ப்பாணத்தில் பழைய இடத்தில் மீண்டும் திறந்துள்ளது என்பதனை எமது வாசகர்கள் விளம்பரதாரர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

உங்கள் தொடர்புகளுக்கு } இல: 31, வைமன் வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி, தொலைநகல்: 021-2227917